பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 21 வெள்ளிக்கிழமை 06.09.2024 கதிர் 303



## இரட்டைவேட அரசியல் செய்யும் சஜித்

### வவுனியாவில் அநுர சாடல்

சஜித் பிரேமதாச இரட்டைவேட அரசியல்செய்கிறார். அவருடன்சம்பிக்க ரணவக்கவும் இருக்கிறார். ரிஷாத் பதியுதீனும் இருக்கிறார். காலிக்குப் போகும்போது அவர் ரிஷாத்தை அழைத்துச் செல்லமாட்டார். வடக்கு கிழக்குக்கு வரும்போது சம்பிக்கவை அழைத்து வரமாட்டார். இதுதான் இரட்டை அரசியல் என்றார் தேசிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்க.

தேசிய மக்கள் கூட்டணியின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் வவுனியா குருமன்காட்டில் ☞ 8

## தயாசிறி எம்.பிக்கு நீதிமன்றத் தடை

### வேலுகுமார் தாக்கல் செய்த வழக்கில்

நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தொடர்பாக அவதூறான மற்றும்தவறானதகவல்கள் சமூக வலைத்தளங்கள் மூலம்வெளியிடப்படுவதை தடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் ☞ 8

## ஜேவிபியும் ரணிலும் சேர்ந்து பொய்களைப் பரப்புகிறார்கள்

### சஜித் பிரேமதாச குற்றச்சாட்டு

ஜேவிபியும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ஒன்றாக இணைந்து பொய்யான தகவல்களையும் வதந்திகளையும் பரப்புகின்றார்கள். பேஸ்புக் ஊடாகவும் இணையதளங்களுக்கு பணம்செலுத்தியும் ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றாக இணையப் போகின்றன என்று பொய்யான செய்திகளைப் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

தமது கையில் இருந்த அதிகாரத்தைப்பயன்படுத்தி கடந்த காலங்களில் தங்களை அடித்துத் துவம்சம் செய்த ஜனாதிபதிகளை தாம் ஆட்சிக்கு வந்தால்"வச்சுசெய்வது"என்றுஜேவிபி தீர்மானித்துவிட்டது போலுள்ளது. அதனால்தான் தமது தலைவர் ஆட்சியைப் பிடித்துவிட்டாரானால் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டுவரும் அரச சலுகைகள் அனைத்தும்நீக்கப்படும்என்றுஅந்தக் கட்சியின் செயற்குழு உறுப்பினர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.

சலுகைகள் மீளப்பெறப்படுவது மட்டுமல்ல அவர்களுக்கு வழங்கப்பட்ட வீடுகள், சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும் என்றார். போதாக்குறைக்கு இதையெல்லாம் செய்யும்போது விழா எடுப்பார்களாம்.

அரச வீடுகளில் உள்ள முன்னாள் ஜனாதிபதிகளை அங்கிருந்து விரட்டி அவரது பிள்ளைகளிடம் ஒப்படைக்கப்போகின்றோம் ☞ 2

## அரசியல்வாதிகள் ஒப்பந்தங்களை வீசிவிடுவார்கள்

### அதை செய்யாத ட்ராக்டருக்கு வாக்களியுங்கள் – சீலரத்ன தேரர்

தேர்தல் காலத்தில் அரசியல் கட்சித் தலைவர்கள் செய்யும் ஒப்பந்தங்களைத் தூக்க வீசிவிடுவார்கள் என்று ☞ 8

# மொட்டின் மறு அவதாரம் சஜித்; 13ஐ வைத்து ஏமாற்றுகிறார்கள்

### யாழ், கிளிநொச்சியில் அனுர ஆவேசம்



மொட்டின்மறுஅவதாரம்சஜித்.மொட்டுடன் இருந்த பலரும் சஜித்துடன் நிற்கின்றார்கள். எஞ்சியவர்கள் ரணி-லுடன் நிற்கிறார்கள். ஒவ்வொரு ஜனாதிபதித் தேர்தலிலும் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தைக் காட்டி ஏமாற்றுகிறார்கள். அதை வைத்து தெற்கு அரசியல்வாதிகள் வியாபாரம் செய்கிறார்கள் என்று தெரிவித்தார் தேசிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திஸநாயக்க.

கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களில் நேற்று இடம்பெற்ற ☞ 2

## வரியில்லாத வர்த்தகத் தொகுதி துறைமுக நகரில் நேற்று திறப்பு




கொழும்பு துறைமுக நகரத்தில் நிர்மாணிக்கப்பட்ட தி மால் (The Mall) வரியில்லாவர்த்தகதொகுதியைஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று திறந்து வைத்தார்.

இந்த வர்த்தகத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டிருக்கும் வரியில்லா வர்த்தக தொகுதி, விற்பனை நிலையங்கள், ☞ 8

## நாமலின் குற்றச்சாட்டு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இலங்கைத் தமிழரசுக்கட்சியும் கூட்டிணைந்தே மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படுவதற்கு முட்டுக்கட்டை போட்டதாக குற்றஞ்சாட்டிய பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ சஜித்தை ஆதரிக்கும் தீர்மானத்தினால் அக்கட்சி பிளவடைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

இது குறித்து நாமல் ராஜபக்ச மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவும் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியும் கூட்டிணைந்தே மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படுவதற்கு ☞ 2

## 4 ராஜாங்க அமைச்சர்களின் பதவிகளைப் பறித்த ரணில்

### உடனடியாக நீக்கம்



துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் இராஜாங்க அமைச்சர் பிரேமலால்ஜயசேகர, மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த, விவசாய இராஜாங்க அமைச்சர் மொஹொன் பிரியதர்ஷன டிசில்வா, நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் சிறிபால கம்லத் ஆகியோர் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கை ஜனநாயக சோசலிசக்குடியரசு அரசியலமைப்பின் 47(3) (அ) பிரிவின்கீழ்ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் உடனடியாக ☞ 2

## சு.கவின் ஒரு தொகுதியினர் நாமலுடன் கைகோர்த்தனர்

எதிர்வரும்தேர்தலில்ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்சவுக்கு ஆதரவை உறுதிப்படுத்தும் புதிய புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று கைச்சாத்திடப்பட்டது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் (சு.க.) தொகுதி ☞ 8

## விஜயதாச ராஜபக்சவினதும் தேர்தல் அறிக்கை வெளியீடு

### செனட் சபை, அரசமைப்பு நீதிமன்றம் குறித்து அறிவிப்பு

தேசிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாச ராஜபக்சவின் முறையான நாடொன்று எனும் தொனிப்பொருளிலான தேர்தல் அறிக்கை நேற்று இலங்கை மன்றக்கல்லூரியில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாத்தல், தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் நல்லிணக்க சமூகத்தை நிலைநாட்டுதல், புதிய அரசமைப்பு, செனட்சபை உருவாக்குதல், அரசமைப்பு ☞ 8

## ரணிலுக்கு ஆதரவாக ஆளுநர்கள் பரப்புரை செய்வது பொருத்தமற்றது

### பதவி விலகி சஜித் பக்கம் வந்த முசம்மில் தெரிவிப்பு

கோட்டாபய ராஜபக்ச ஆட்சி காலத்தில்ஆளுநர்கள்அரசியலில் ஈடுபடத்தடைவிதிக்கப்பட்டிருந்தது. ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக ஆளுநர்கள் நேரடியாக பரப்புரை நடவடிக்கைகளில்ஈடுபடுகின்றனர். இது பொருத்தமற்ற அரசியல் கலாசாரமாகும் என்று ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

என்றும்அறிவித்திருக்கிறார்களாம். என்னதான் செய்கிறார்கள் என்று பார்ப்பதற்காகவது ஒரு தடவை அவர்கள் வென்றால் சிறப்பாக இருக்கும்போலத்தான்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதிகளின் உணவுச் சலுகையை நிறுத்துவதுடன் அவர்களின் ஓய்வூதியமும் நிறுத்தப்படடுவிடுமாம். முன்னாள் ஜனாதிபதிகள் என்கிற பதவியில் இருந்து அவர்கள் நீக்கப்படும் நிகழ்வு சம்பிரதாயபூர்வப்படி நடக்குமாம்.

நள்ளிரவில் விசேட வர்த்தமானி வெளியிடப்படும் என்றும், முன்னாள் ஜனாதிபதிகள், அவர்களின் மனைவியரான முன்னாள் -முதல் பெண்மணிகளை அரச மாளிகையில் இருந்து அகற்றுவது சம்பிரதாய முறைப்படி மேற்கொள்ளப்படும் என்றும் காலையில், அவர்களின் வயது மற்றும் நோய் மற்றும் அவர்களின் மகன்கள் மற்றும் மகள்களைக் கருத்தில் கொண்டு, பொருத்தமானவர்களிடம் ஒப்படைக்கப்படுவார்கள் என்றும் சமந்த வித்யாரத்ன குறிப்பிட்டார்.

............

அனுராதபுரத்தின் முன்னாள் உதவிப் பொலிஸ்அத்தியட்சகர்சஞ்சீவமஹநாநாமவை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்னவின் வாகனம் மீது துப்பாக்கியால் சுட்ட விவகாரம் தொடர்பில் இடம்பெற்ற விசாரணைகளின் பின்னர் அவர் கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

அரசியல்வாதிக்கும்பொலிஸ்அதிகாரிக்கும் இடையில் அப்படி என்னதான் முரண்பாடு என்கிற விவரத்தைச் சொல்கிறார்கள் இல்லை. விரைவிலேயே தெரியவந்துவிடும்.

........................

சிங்களவர்கள் என்னதான் தமிழர்கள் மீது வன்மத்தை உமிழ்ந்து, இனவாதம் கக்கினாலும் ஆபத்து அல்லது தேவை என்று வரும்போது இந்துக் கடவுளர்களிடம் தஞ்சமடைவதற்குப் பின்னிற்பதில்லை.

இந்த நாட்டின் தலைவர்களான மகிந்த ராஜபக்ச, ரணில் விக்கிரமசிங்க உட்படப் பலரும்இந்தப்பட்டியலில்அடங்குபவர்கள்தான். அதிலும் மகிந்தவெல்லாம் ஒருபடி மேலே. தமிழர்கள் இங்கு கொத்துக் கொத்தாக அழித்தொழிக்கப்பட்ட பாவத்தையே திருப்பதிக்குச் சென்று கழுவிக்கொள்பவர் அவர்.

இப்போது அந்தப் பட்டியலில் இணைந்திருப்பவர் பொலிஸ் மா அதிபராக இருந்தவரான தேசபந்து தென்னக்கோன். அவரும் திருப்பதிக்குச் சென்று வந்திருக்கிறாராம்.

பொலிஸ் மா அதிபர் பதவிக்கு அவரை நியமித்த முடிவுக்கு உயர் நீதிமன்றம் தடை விதித்ததைத்தொடர்ந்து, அவர்நாட்டைவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டார் என்றெல்லாம்கூடத் தகவல்கள் பரப்பப்பட்டன. ஆனால், பெரும் துன்பப்பட்டு, நீண்ட நாள்கள் காத்திருந்த பெற்ற பொலிஸ்மா அதிபர் பதவி இப்படி அற்ப ஆயுசில் பறிக்கப்பட்டதால் மனவருத்தமடைந்த அவர் இந்தியாவிற்கு ஒரு ஆன்மீகப் பயணம்தான் போயிருந்தாராம்.

தேசபந்துதென்னகோன்தனதுவெளிநாட்டு பயணத்தைமுடித்துக்கொண்டு இலங்கைக்கு திரும்பிவிட்டார் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## மொட்டின் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரது தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று மாலை இடம்பெற்ற தேசிய மக்கள் கூட்டணியின் கூட்டத்தில் உரையாற்றிய அவர் தெரிவித்ததாவது:

தமிழ்மக்களிடம் 13 ஐவைத்து வியாபாரம் செய்வதற்குநான்வரவில்லை. தென்னிலங்கை அரசியல்வாதிகள் ஒவ்வொரு ஜனாதிபதி தேர்தலிலும் தமிழ் மக்களிடம் 13 ஐ காட்டி வாக்குப் பெற முயற்சிக்கிறார்கள்.

நான் தமிழ் மக்களிடம் 13 தருகிறேன் என வியாபாரம் செய்ய மாட்டேன். ஒட்டுமொத்த இலங்கை மக்கள் விரும்பும் மாற்றத்தை உருவாக்குவதோடு புதிய அரசமைப்பை ஏற்படுத்துவேன்.

நாட்டில் நீண்ட காலமாகப் புரையோடி உள்ள இலஞ்சம், ஊழல்வாதிகளை அப்புறப்படுத்தி புதிய இலங்கையை உருவாக்குவதே எனது இலக்கு அதற்காகவே மக்கள் எங்களோடு அணி திரண்டுள்ளனர்.

நாட்டு மக்கள் எம்முடன் திரண்டுள்ள நிலையில் சுமந்திரன், சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவுவழங்கிதமிழ் மக்களின்எதிர்பார்ப்பை சீரழிக்கப் பார்க்கிறார்.

சஜித் பிரேமதாச 13 தரப் போகிறாரா அல்லது 13 பிளஸ் தரப் போகிறாரா என்பது தொடர்பில் தமிழ் மற்றும் சிங்கள மக்களுக்கு உண்மையை வெளிப்படுத்தவேண்டும்.

நாங்கள்நாட்டைகொள்ளையடிக்கவில்லை நாட்டு மக்களைக் கடனாளியாக்கவில்லை.

நாட்டை கொள்ளையடித்தவர்களும் நாட்டை கடனாளியாக்கியவர்களும் தற்போது ஜனாதிபதி வேட்பாளராகக் களம் இறங்கிய சஜித் மற்றும் ரணில் பக்கமே உள்ளனர்.

இவர்களால் நாட்டை அழித்தவர்களை ஒன்றுமே செய்ய முடியாது ஏனெனில் மூவரும் ஒருவரை ஒருவர் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபித்துள்ளார்கள்.

ஆகவே தேசிய மக்கள் சக்தி நாட்டு மக்கள் எதிர்பார்த்து உள்ள மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கு மக்கள் தயாராக இருக்கின்ற நிலையில் வடக்கு மக்களும் இந்த மாற்றத்தில் பங்கெடுக்க தயாராக வேண்டும் - என்றார்.

கிளிநொச்சியில்நேற்று இடம்பெற்றதேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் தெரிவித்ததாவது:

எமது நாட்டில் தேர்தல்கள் நீண்ட காலமாக நடைபெற்று வருகின்றது. நீங்களும் பல கட்சிகளுக்கு வாக்களித்து வருகின்றீர்கள். உங்களுடைய வாக்குகளால் பல அட்சிகள் உருவாகியிருக்கின்றன. ஆனால், அந்த அரசுகளால் இலங்கையில் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது. மக்கள் வறுமைக்குள் தள்ளப்பட்டார்கள். போர் உருவானது. கல்வி, சுகாதாரம் அழிந்தது.

இத்தனைக்கும் அந்த ஆளும்தரப்பில் அங்கம் வகித்தவர்கள் பிரச்சினைகளைச் சந்திக்கவில்லை. மாறாக அவர்கள் வளர்ச்சி அடைந்தார்கள். பொருளாதாரத்திலும் முன்னேற்றமடைந்தார்கள்.

அதனால்தான் மாற்றம் தொடர்பில் சிந்திக்க வேண்டி உள்ளது. அவ்வாறான மாற்றத்தை உருவாக்க வேண்டும். விசேடமாக வடக்கில் உள்ள மக்களிடம் மாற்றம் ஏற்பட வேண்டும். அரசியலில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்ற சிந்தனை எழுந்துள்ளது.

நீங்கள் அறிந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள், இராணுவத்தினரிடம் கேட்டுப் பாருங்கள். தபால் மூல வாக்களிப்பில் 80 வீதமானவர்கள் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளித்துள்ளனர்.

இந்த தேர்தலில் தென்னிலங்கையில் எவ்வாறான மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். சிங்கள மக்கள் மத்தியில் மாத்திரமல்ல, வடக்கு மக்களும் அந்த வெற்றியில் எம்முடன் இணைய வேண்டும்.

இதுவரை வந்த அரசுகள் வடக்கு மக்களை உள்ளடக்கியதாக அமைந்திருக்கவில்லை. முன்னொரு தேர்தலில் இங்குள்ள மக்கள் புறக்கணிப்பில் ஈடுபட்டனர். பின்னர் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவினை முழுமையாக வழங்கிய போதிலும் அவரால் வெற்றிபெற முடியவில்லை.

பின்னர் கோட்டபாய ராயபக்சவிற்கு எதிராக வாக்களித்தீர்கள் ஆனாலும் அதிலும் ஆளும்தரப்பை வெற்றி கொள்ள முடியவில்லை. இந்த நிலையில் தேசிய மக்கள் சக்திக்கு இம்முறை வாக்களியுங்கள் என்று உங்களிடம் கேட்கின்றோம்.

நாங்கள் புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்குவதற்கு திட்டமிட்டுள்ளோம். அதன் மூலம் அனைத்து இன மக்களையும் உள்ளடக்கிய வகையில் தீர்வு கிடைக்கும். நீண்ட கால பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும்.

கிளிநொச்சியில் 126 குளத்துக்கு மேல் அபிவிருத்தி செய்யப்படாமல் இருப்பதாக விவசாயி ஒருவர் எனக்கு தெரிவிக்கின்றார். 400 குளங்கள் வரை காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றார். ஒரு வருடத்திற்குள் அனைத்துக் குளங்களும் சீர் செய்து கொடுக்கப்படும்.

விவசாய உரம், மருந்துகள் உள்ளிட்டவை சலுகை விலையில் பெற்றுக்கொடுக்கப்படும். அத்துடன் விவசாய உற்பத்திகளுக்கு சிறந்த நியாயமான விலை பெற்றுக்கொடுக்கப்படும்.

மக்களின் பணங்களையும், பொதுச் சொத்துக்களையும்திருடியவர்களைசட்டத்தின் முன் நிறுத்துவோம். அவர்களிடமிருந்து திருடப்பட்ட மக்களின் சொத்துக்களை பறிப்போம்.

திருட்டு, மோசடி இல்லாத அரசாக தேசிய மக்கள்சக்திமட்டுமேஇருக்கும். எமதுஆட்சியில் அவ்வாறானவர்கள் மட்டுமே இருப்பார்கள். வறுமையில் உள்ள மக்களுக்கு 10,000 ரூபா வழங்குவோம். விரைவில் மின்கட்டணம் குறைக்கப்படும். உணவு, மருத்துவம் உள்ளிட்டவற்றுக்கு வரி இல்லாது செய்யப்படும். அதனால் ஏழை மக்களின் வாழ்வில் மறு மலர்ச்சி உருவாகும்.

எமது நாடு, எந்த பக்கமிருந்து பார்த்தாலும் பெறுமதியான நாடாக இருக்கின்றது. அதனை இதுவரை வந்த ஆட்சிகள் அழித்தன. தெற்குப் பகுதியிலிருந்து தேசிய மக்கள் சக்தி தொடர்பில் செய்திகள் வருகின்றதா?

அடுத்த 2 வாரமும் எதிர்காலத்தை தீர்மானிக்கும் காலங்களாகும். பழைய பாதையிலிருந்து விலகி புதிய பாதைக்குள் செல்வோம். இங்குள்ள மக்கள் யாருக்கு வாக்களிப்பது என்று இதுவரை தீர்மானிக்கவில்லை. ஆகவே சிந்தித்து செயற்பட வேண்டும்.

இதுவரை காலமும் இவாதம் பேசி இனவாத அரசாங்கமே முன்னெடுக்கப்பட்டது. அவ்வாறு இனவாதம் பேசியவர்கள் இன்று எங்கு இருக்கின்றார்கள் தெரியுமா?

மொட்டுக் கட்சியே அதிகம் இனவாதம் பேசியது. அந்தமொட்டுக்கட்சியில்இருந்தவர்கள் இன்று ரணிலுடனும், சஜித்துடனும்தான் நிற்கின்றார்கள். ராஜபக்சவின் இனவாதம் இன்று சிறிதாகிவிட்டது.

11 வருடங்கள் ராஜபக்ச ஆட்சியில் இருந்த பீரிஸ் கோட்டாவின் அரசியல் 2 வருடம் இருந்தார். இன்று சஜித்துடன் நிற்கின்றார். மொட்டின் மறு அவதாரம் சஜித். மொட்டுடன் இருந்த பலரும் சஜித்துடன் நிற்கின்றார்கள்.

இவ்வாறு இரண்டு அவதாரங்களாக ரணிலுடனும், சஜித்துடனும் ஒழிந்து நிற்கின்றார்கள். அவர்களை நாங்கள் பக்கத்திலும் எடுக்க மாட்டோம். மஞ்சள் நீராடினாலும் அவர்கள் செய்தவை அழிந்துவிடுமா?

இங்குள்ள மக்கள் இனவாதிகளுக்கு எதிராக வாக்களிக்க வேண்டும் - என்றார்.

## ஜேவிபியும்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சக்தியின் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

2024 ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு காலியில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் கூட்டணியின் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்டின் பொருளாதார விருத்திக்குப் பெரும் பங்களிப்பை வழங்குகின்ற தனியார் துறை ஊழியர்களுக்கான பலமான வேலைத் திட்டங்கள் குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொருளாதார விருத்திக்கு தனியார் துறையின் பங்களிப்பு மிகவும் முக்கிய மானதாகும். தொழில் வழங்குனர்களின் முதலீட்டைப்போலவேஊழியர்களும்மிகவும் சிரமத்துக்கு மத்தியில் பெரும் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் பணியிடத்தில் செய்கின்ற உன்னதமான பணிக்காக சிறப்பான திட்டங்கள் உண்டு. இதன் ஊடாகத் தனியார் துறையினரின் குறைந்தபட்ச சம்பளத்தை 25,000 ரூபா வரை கொண்டு வருவதற்கான திட்டங்கள் வகுக்கப்படும்.

அத்தோடு ஊழியர்களின் உரிமைகளை பாதுகாக்கின்ற வகையிலான சேவைக் கொள்கையும் தயாரிக்கப்படும். ஐக்கிய மக்கள் சக்திக்கு தெளிவான கொள்கையும், தூரநோக்கு பார்வையும் உண்டு.

ஐக்கிய மக்கள் சக்தியின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டு இருக்கின்ற இந்தச் சந்தர்ப்பத்தில், ஜேவிபியும் ஜனாதிபதியும் ஒன்றாக இணைந்து பொய்யான தகவல்களையும் வதந்திகளையும் பரப்புகின்றார்கள்.

பேஸ்புக் ஊடாகவும் இணையத ளங்களுக்கும் பணம் செலுத்தி ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றாக இணையப் போகின்றன என்று பொய்யான செய்திகளைப் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

ஐக்கியமக்கள் சக்தி மக்களோடுமாத்திரமே இணைந்திருக்கும், மிகவும் மோசமான அளவில் வீழ்ச்சி அடைந்திருக்கும் ஊழல் அரசியல்வாதிகளுடன் கூட்டுச்சேர்வதில்லை.

ஜனாதிபதிக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவருக்கும் ஒன்றாக இணைவதற்கு விருப்பம் இருக்கலாம். அவர்களுக்கு ஒன்றாக இணைய முடியுமாக இருந்தாலும், நாட்டை சீரழித்த கும்பலோடு ஐக்கிய மக்கள் சக்தி ஒன்றாக இணையாது.

தற்பொழுது நாட்டைக்கட்டி எழுப்பக்கூடிய சிறந்த கொள்கை திட்டமும் தூரநோக்குப் பார்வையும், வேலைத்திட்டமும் ஐக்கிய மக்கள் சக்தியிடமும், ஐக்கிய மக்கள் கூட்டணியிடமுமே காணப்படுகின்றது.

இயலுமையும், திறமையும், அனுபவமும், அறிவாற்றலும், சிந்தனைப்போக்கும், உள்ள சிறந்த குழு எம்மிடமே இருக்கின்றது. ஐக்கிய மக்கள் சக்தியின் தூரநோக்குப் பார்வை ஊடாகவே இந்த நாடு வீழ்ந்து இருக்கின்ற அதலபாதாளத்திலிருந்து அதனை மீட்டெடுக்க முடியும்.

அனைத்துப் பாடசாலைகளையும் சகல வசதிகளையும் கொண்ட பாடசாலைகளாக மாற்றி, கல்வி துறையை பலப்படுத்துவோம். இந்தப் பொறுப்பை ஐக்கிய மக்கள் கூட்டணி நிறைவேற்றும்.

எமது நாட்டில் பெரும்பான்மையானோர் ஏழைகளாக மாறி இருக்கின்ற இந்த சந்தர்ப்பத்தில், வறுமையை ஒழிப்பதற்காக 24 மாதங்களுக்கு தலா மாதாந்தம் 20,000 ரூபா வீதம் வழங்கி வறுமையில் இருந்து அவர்களை மீட்டெடுப்போம். ஆத்ம கௌரவத்தோடு வாழுகின்ற பரம்பரையை உருவாக்குவோம் என்றார்.

## ரணிலுக்கு....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸாம்மில் தெரிவித்தார்.

தனதுஆளுநர்பதவியைஇராஜினாமாசெய்த அவர், நேற்று மாலை மினுவாங்கொடையில் இடம்பெற்ற சஜித் பிரேமதாசவின் தேர்தல் பரப்புரைக்கூட்டத்தில்மேடையேறிஅவருக்குத் தனது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தார்.

அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

எனது பதவி விலகல் கடிதத்தை இன்று காலை (நேற்று) ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்கவுக்கு அனுப்பி வைத்துவிட்டுதான் இந்த மேடையில் பேசுகின்றேன். நான் முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவின் காலத்திலேயே ஆளுநராக நியமிக்கப் பட்டேன். தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால்எனதுபதவிநீடிக்கப்பட்டது.

கோட்டாபய ராஜபக்ச ஆட்சி காலத்தில் நான் வடமத்திய மாகாண ஆளுனராக செயற்பட்டபோது அவர் குருணாகல் பிரதேசத்துக்கு வந்திருந்தார். அங்கு அவரை வரவேற்பதற்காக நான் சென்றபோது, ஆளுநர்கள் அரசியலில் ஈடுபடக் கூடாது எனக் கூறினார். அவரது ஆட்சி காலத்தில் ஆளுநர்கள் அரசியலில் ஈடுபடத் தடை இருந்தது. ஆனால் இன்று அவ்வாறில்லை.

7மாகாணங்களின்ஆளுநர்கள்ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்காக நேரடியாக தேர்தல் பரப்புரைகளில் ஈடுபடுகின்றனர். நான் ரணசிங்கபிரேமதாசவின்பல்கலைக்கழகத்தில் கற்றுள்ளதால் அந்தக் கலாசாரத்தை பின்பற்றுவதில்லை. எனவே தான் இராஜினாமாக் கடிதத்தைக் கையளித்தேன்.

ஒன்றுக்கு இரண்டு முறை சிந்தித்து தீர்மானத்தை எடுக்குமாறு ஜனாதிபதி செயலகத்திலிருந்து எனக்கு அழைப்பு வந்தது. நான் ஆழமாகச் சிந்தித்துதான் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளேன். அதே போன்று இந்நாட்டு மக்களும் செப்டெம்பர் 21 சரியான தீர்மானத்தை எடுத்து தமது கடமையை நிறைவேற்ற வேண்டும் - என்றார்.

## நாமலின்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முட்டுக்கட்டை போட்டதுடன் சஜித்தை ஆதரிக்கும் தீர்மானத்தினால் இலங்கை தமிழ் அரசுக் கட்சி பிளவடைந்துள்ளது.

மாகாண சபைகளுக்கான தேர்தல் சட்டத்தில்திருத்தச்சட்டமூலத்தைவிவாதமின்றி நிறைவேற்றுவதற்கு பொன்னான வாய்ப்பு காணப்பட்டபோதும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினரும் தங்களின் சொந்த அரசியல் காரணங்களுக்காகத் அதனைத் தவறவிட்டுள்ளனர்.

இலங்கைத் தமிழரசுக்கட்சி பல்வேறு தருணங்களில் மாகாண சபைகளுக்கான தேர்தல் பற்றியும் 13ஆவது திருத்தச் சட்டத்தினைமுழுமையாகநடைமுறைப்படுத்து பற்றியும் அதிகமாகப் பேசுகின்றது, ஆனால் செயற்பாட்டில் வேறுபட்ட நிகழ்ச்சி நிரலை அக்கட்சியினர் கொண்டிருக்கின்றார்கள் என்பதுதான் வெளிப்படுத்தப்படுகின்றது.

இந்த உண்மையை நான் சொன்னால், எனக்குதமிழ்சினிமாத்திரைப்படங்களில்வரும் 'வில்லன்' போன்று முத்திரை குத்துகிறார்கள்.

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஒருபோதும் இலங்கை வெளிவிவகார கொள்கை ஏற்படுத்தக்கூடாது

## எரான் கருத்து



ஐக்கிய மக்கள் சக்தி தனது எதிர் கால பொருளாதார திட்டத்தை புதன்கிழமை இரவு தொழில்முறை மற்றும் வணிக சமூகத்திற்கு வெளியிட்டது. கட்சியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித்பிரேமதாஸவின் தலைமையின் கீழ் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கட்சியின் பொருளாதார மூலவர்களான ஹர்ச டிசில்வா, எரான் விக்கிரமரட்ண, கபீர்ஹாசிம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் சர்வதேச நாணயநிதியத்துடனான சமீபத்தைய திட்டம் தொடரும் என இந்த நிகழ்வில் உரையாற்றுகையில் தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரட்ண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

சரியானதை செய்வது எப்போதும் அரசியல் ஆதாயமாக மாறாது.

சஜித்பிரேமதாஸ தலைமையிலான எதிர்கால ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கம் வர்த்தக நடவடிக்கைகளில் குறுக்கிடாது.

மாறாக வர்த்தக நடவடிக்கைளிற்கு ஏதுவான சூழலை உருவாக்குவது குறித்து கவனம் செலுத்துவோம்.

சர்வதேச நாணயநிதியத்துடனான சமீபத்தைய திட்டம் தொடரவேண்டும். நுண்பொருளாதார அளவில் மாற்றங்கள் அவசியம். ஆனால் சமூக ஸ்திரதன்மையும் அவசியம்.

நாங்கள் சமூக ஜனநாயகத்தை நம்புகின்றோம். முடிவிற்கு ஒரு வழியிருக்கவேண்டும் ஆனால் அந்த வழிமுறை சிறந்ததாகயிருக்கவேண்டும்.

சிறந்த முடிவைஎடுப்பதற்கான அதிகாரப்பகிர்விற்கு நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்.

சுதந்திரமான தொழில்நிறுவனங்களை நாங்கள் நம்புகின்றோம். அவை செல்வத்தை - வளத்தை - உருவாக்குகின்றன. ஆனால் இதனை சமூக சந்தை பொருளாதாரத்தில் செய்யலாம்.

இலங்கையின் வெளிவிவகார கொள்கை ஒருபோதும் இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடாது. இந்திய துணைக் கண்டத்திலிருந்து வருடாந்தம் 2மில்லியன் சுற்றுலாப்பயணிகளை கவரும் இலக்கை இலங்கை கொண்டிருக்கவேண்டும்.

இலங்கைகையை பொறுத்தவரை முக்கிய பிரச்சினை என்னவென்றால் சட்டத்தின் ஆட்சியே சட்டத்தின் ஆட்சியை சிறந்த முறையில் நடைமுறைப் படுத்தினால் வெளிநாடுகளின் அதிகளவு முதலீடுகளையும் நம்பிக்கையையும் பெறலாம். - என்றார்.(05)

# வட்டுக்கோட்டையில் வன்முறைக்கும்பல் அட்டகாசம் பயத்தில் பொலிஸ் நிலையத்தில் இரவை கழித்த மக்கள்



யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றில் புதன்கிழமை இரவு அத்துமீறி நுழைந்த வன்முறை கும்பல் ஒன்று சிறுவர்கள் மற்றும் பெண்கள் உள்ளிட்ட ஐவர் மீது தாக்குதலை நடாத்தி விட்டு தப்பி சென்றுள்ளது.

தாக்குதல் மேற்கொண்டவர்களை கைதுசெய்ய வேண்டும்எனகோரிபாதிக்கப்பட்டகுடும்பத்தினருடன் , அயலவர்களும் இணைந்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையம் முன்பாக இரவு கூடி இருந்தனர்.

சம்பவம்தொடர்பில்பாதிக்கப்பட்டபெண்ணொருவர் தெரிவிக்கையில் -

ஆறு பேர் கொண்ட வன்முறை கும்பல் ஒன்று இரவு வீட்டுக்கு வந்து , இருவர் வெளியில் காவல் நிற்க ஏனைய நால்வரும் வீட்டிற்குள் நுழைந்து வீட்டில் இருந்த 05 வயதான என் மகனை தாக்கினார்கள்.

பின்னர் எனது சகோதரி, குழந்தைக்கு பாலூட்டிக்கொண்டிருந்த வேளை அவர் மீதும் தாக்குதல் நடத்தினர். அதனை தடுக்க சென்ற சகோதரனையும் தாக்கினார்கள். அங்கிருந்த எனது மற்றைய மகனையும் தாக்கினார்கள்.



நாங்கள் அவலக்குரல் எழுப்ப , வீட்டில் நின்ற எனது மோட்டார் சைக்கிளை தள்ளி விழுத்தி , கதிரைகளை அடித்து உடைத்து , வெளித் தகரங்களை பிடுங்கி அட்டகாசம் புரிந்து விட்டு தப்பி சென்றுள்ளனர்.

வன்முறை கும்பலின் தாக்குலில் காயமடைந்த எனது சகோதரியை சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்துள்ளோம்.

இரவில் வீட்டில் இருக்க பயமாக இருக்கிறது. மீண்டும் அவர்கள் வந்து தாக்குதல் நடத்துவார்களோ என்ற அச்சத்தில், தாக்குதலாளிகளை கைது செய்யுமாறுகோரிவட்டுக்கோட்டைபொலிஸ்நிலையம் முன்பாக கூடியுள்ளோம் எனத் தெரிவித்தார்.

சம்பவம்தொடர்பில்பொலிஸார்விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.(05)



# டிக்டொக் வீடியோக்கள் அனுப்பி 45 லட்சம் ரூபா யாழில் மோசடி

## மூன்று பெண்கள் கைது

டிக்டொக் வீடியோக்களை அனுப்பி, சுவிஸ் நாட்டில் வசித்து வரும் 52 வயதுடைய நபர் ஒருவரிடம் இருந்து சுமார் 45 லட்ச ரூபாவுக்கும் மேல் மோசடி செய்த குற்றச்சாட்டில் மூன்று பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது -

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபர் தற்போது சுவிஸ்நாட்டில்வசித்துவருகின்றார். அவரது வட்ஸ் அப் இலக்கத்திற்கு அழகிய பெண்ணொருவரின் டிக்டொக் வீடியோக்கள் அனுப்பப்பட்டுள்ளன. வீடியோக்களை பார்த்து, வீடியோக்கள் வரும் அந்த தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகளை பேணி உள்ளார்.

அந்த இலக்கத்தில் இருந்து கதைத்த பெண்ணும் தனக்கு 22 வயது , தான் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர் என கூறி பழக ஆரம்பித்து பழக்கம் நெருங்கிய தொடர்பாக மாறியுள்ளது. இந்நிலையில், குறித்த பெண் பல்வேறு கட்டங்களில், பல்வேறு காரணங்களை கூறி சுமார் 45 லட்சத்துக்கும் மேலாக பணம் பெற்றுள்ளார்.

பெண்ணிடம் வீடியோ கோல் கதைக்க பல முறை சுவிஸ் நாட்டவர் முயற்சித்த போதிலும், அந்த பெண் அதற்கு மறுப்பு தெரிவித்துள்ளார். அண்மையில் சுவிஸ் நாட்டவர் யாழ்ப்பாணம்வருகைதந்து,பெண்ணை நேரில் சந்திக்க கோரிய போதிலும் அப்பெண் நேரில் சந்திக்க மறுப்பு தெரிவித்து, தொடர்பை துண்டிக்க, சந்தேகம் அடைந்தவர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த வேளை, டிக்டொக் வீடியோவில் காணப்பட்ட பெண்ணை கைது செய்து விசாரணை செய்த போது , அப்பெண்ணுக்கு இந்த சம்பவத்திற்கும் தொடர்பு இல்லை என்பது தெரியவந்துள்ளது.

அதனை தொடர்ந்து சுவிஸ் நாட்டில் இருந்து பணம் போடப்பட்ட வங்கி கணக்கு இலக்கத்தின் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்து, கணக்கிலக்கத்திற்கு சொந்தமான பெண்ணை கைது செய்தனர்.

அவரிடம் விசாரணைகளை முன்னெடுத்த போது, தனக்கு தெரிந்த பெண்ணே தான் எனது கணக்கு இலக்கத்திற்கு சுவிஸ்நாட்டவரை பணம் போட சொல்லி , பணம் போடப்பட்டது என கூறியுள்ளார்.

அந்த பெண் கூறிய 47 வயதான பெண்ணை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்த வேளை , குறித்த 47 வயது பெண்ணுக்கும் , சுவிஸ் நாட்டில்வசித்துவந்தவருக்கு இடையில் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் தொடர்பு ஏற்பட்டுள்ளது. அவர் கடந்த முறை யாழ்ப்பாணம் வருகை தந்து அப்பெண்ணுடன் நெருக்கமாகவும் பழகியுள்ளார்.

பின்னர் அவர் சுவிஸ் நாட்டிற்கு சென்ற பின்னர் , இப்பெண்ணுடனான தொடர்பை குறைத்துள்ளார். இந்நிலையில் அவரின் பலவீனங்களை அறிந்திருந்த குறித்த பெண் , தனது நண்பியின் பெயரில் டிக்டொக் ஐடியில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த அழகிய பெண்ணொருவர் இருப்பதனை அவதானித்து, அப்பெண்ணின் வீடியோக்களை தரவிறக்கி, இவருக்கு வட்ஸ் அப் ஊடாக அனுப்பி, அப்பெண்ணின் பெயரில் உறவை வளர்த்துள்ளனர்.

பணம்போடசொல்லிகொடுக்கப்பட்ட வங்கிகணக்கிலக்கத்தில்உள்ளபெயரும், டிக்டொக் வீடியோவிலும் உள்ள பெயரும்ஒன்றாகஇருந்தமையால், அவரும் சந்தேகபடாது பணத்தை அந்த கணக்கு இலக்கத்திற்கு போட்டுள்ளார்.

பணத்தை தொடர்ந்து ஒரு கணக்கு இலக்கத்திற்கு பெறாது, மற்றுமொரு பெண்ணின் கணக்கு இலக்கத்தையும் கொடுத்து அந்த பெண்ணின் கணக்கு இலக்கம் ஊடாகவும் பணத்தை பெற்றுள்ளனர் என்பது விசாரணைகள் ஊடாக பொலிஸார் கண்டறிந்தனர்.

அதனை அடுத்து பிரதான சந்தேக நபரான 47 வயதான பெண்ணும் , வங்கி கணக்கு இலக்கத்தின் உரிமையாளர்களான இரு பெண்களுமாக மூன்று பெண்களையும் கைது செய்து, மேலதிக விசாரணைகளின் பின்னர் , யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில் புதன்கிழமை முற்படுத்தியவேளை , மூவரும் தம் மீதான குற்றங்களை ஏற்றுக்கொண்டதுடன், பணத்தையும்மீளவழங்குவதாக மன்றில் உறுதி அளித்தனர். அதனை தொடர்ந்து மூவரையும் பிணையில் செல்ல மன்று அனுமதித்தது.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## 13 போய் இப்போது புதிய அரசமைப்பு

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக ஒரு வாரத்திற்கு முன்னர் வரைக்கும் அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டமே பேசு பொருளாக இருந்தது. தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறும் நோக்கத்தோடு அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, மாகாண சபைத் தேர்தல் சட்டத் திருத்தத்தை (தனிநபர் சட்டமூலம்) நிறைவேற்றுவதற்கான ஒழுங்குகளை எடுப்பதாக ஒரு பாவனை காட்டி வந்தார். கடைசியில் அது கைவிடப்பட்டது.

தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனால் முன்வைக்கப்பட்டிருந்த தனிநபர் சட்டமூலத்தை 2ஆவது வாசிப்புக்கு எடுத்து நிறைவேற்றியதன் பின்னர் 3ஆவது வாசிப்புக்குக் கொண்டுவருவதைத் தடுத்துவிட்டார் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க. அரசுத் தலைவர் தேர்தலில் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பது என்று தமிழ் அரசுக் கட்சி முடிவு எடுத்ததைத் தொடர்ந்து ரணில் இப்படிச் செய்தார் என்று சொல்லப்பட்டாலும் உண்மை அதுவல்ல. இந்தச் சட்டமூலத்தை மூன்றாவது வாசிப்புக்கு உட்படுத்தி நிறைவேற்றும் எண்ணம் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருக்கவில்லை. அது தொடர்பான தெளிவான அறிவுறுத்தல்கள் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்தன.

தமிழ் அரசுக் கட்சி தனக்கு ஆதரவளிக்காவிட்டாலும் பரவாயில்லை, மற்றவர்களுக்கு ஆதரவளிப்பதைத் தடுப்பதே இந்தச் சட்டமூலத்தின் பின்னால் ரணிலுக்கு இருந்த ஒரே நோக்கமே தவிர வேறு எதுவுமில்லை. இப்போது ரணிலின் பக்கத்தில் 13ஐ நிறைவேற்றுவது தொடர்பான எந்த எதிர்பார்ப்புகளும் இல்லை.

ஜேவிபி தரப்பில் அவர்கள் 13 குறித்து அக்கறைப்படுவதில்லை. இந்தியாவால் கொண்டுவரப்பட்ட இந்தத் திருத்தத்தை தமிழர்கள் நிராகரித்திருக்கும் நிலையில் தாமும் நிராகரிக்கின்றோம் என்பதே அதன் நிலைப்பாடு. சஜித் பிரேமதாசவோ ஆட்சிக்கு வந்தால் 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துகின்றோம் என்கிறார். அரசுத் தலைவர் தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்பாக இந்த மூன்று தரப்பினருமே கூட தமிழ் மக்களைக் கவர்வதற்கான வாய்ப்பாக இந்தப் 13ஐப் பார்த்தார்கள் பயன்படுத்தினார்கள். இப்போது அது கலாவதியாகியுள்ள நிலையில் புதிய அரசமைப்பு என்பதைப் பற்றியே மேடைகளில் பேசுகின்றார்கள்.

அரசுத் தலைவர் தேர்தலில் முன்னணியில் இருக்கும் வேட்பாளர்கள் என்று கருதப்படும் மூவருமே தமது தேர்தல் அறிக்கையில் புதிய அரசமைப்புத் தொடர்பில் குறிப்பிட்டுள்ளனர். அவர்களில் அநுர மட்டும் 2015இல் மேற்கொள்ளப்பட்ட முயற்சியைத் தொடர்வேன் என்று சொல்லியிருக்கிறார். மற்றவர்கள் புதிய அரசமைப்பு ஊடாக என்ன தீர்வு வழங்கப்படும் என்பதைத் தெளிவுபடுத்தவில்லை. ஆனாலும் தேர்தல் நெருங்கும் கடைசி வாரங்களில் தமிழ் மக்கள் முன் வைக்கும் ஈர்ப்புப் பொருளாக இந்தப் புதிய அரசமைப்பு விவகாரத்தையே அவர்கள் குறிப்பிடுகிறார்கள். மேடைகளில் அதுபற்றித்தான் பேசுகிறார்கள். அதிகாரங்கள் பகிரப்படும் என்கிறார்கள், ஆனால், எந்த வகையில் எப்படிப் பகிரப்படும் என்று தெரிவிக்கவில்லை.

# லாஜிக் இல்லாத லாஜிக்

**என் சத்திய மூர்த்தி**

அண்மையில் கொழும்புவில் தமிழ் கட்சி தலைமைகளுடன் கலந்துரையாடிய இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், முன்னால் வைத்த கருத்து ஒன்றே ஒன்றுதான். அதாவது, அனைத்து தமிழ் தலைவர்களும் ஒற்றுமையாக செயலாற்றி, அதன் மூலம் தேர்தல்-அரசியலில், தமிழ் சமுதாயத்தின் சக்தி அல்லது 'பேரம் பேசும் சக்தி'யை நிரூபிக்க வேண்டும் என்பதுதான்.

தோவலுடன் கலந்துரையாடிய தமிழ் தலைவர்களை பெயர் குறிப்பிடாமல் மேற்கோள் காட்டி செய்தி வெளியிட்ட பத்திரிகை தகவலகள்; இவ்வளவுதான். குறிப்பாக, ஜனாதிபதி தேர்தலில் எந்தவொரு வேட்பாளரையும் ஆதரிக்கும் விதத்தில், தோவலிடம் இருந்து தங்களுக்கு எந்தவிதமான சமிக்ஞைகளும் கிடைக்கவில்லை என்பதே அவர்களுடைய கூற்றின் அர்த்தம்.



அதை தலைகீழாக மாற்றி விவரித்தால், இந்தியா ஏதாவது ஒரு வேட்பாளரை ஆதரிக்கிறது என்ற வதந்தி கிளம்பினால், அதனை தமிழ் தலைமைகளும் மக்களும் நம்ப வேண்டாம் என்பதே தோவல், தமிழ் தலைவர்கள் முன்னால் வைத்த கருத்து. இது, தமிழ் பொது வேட்பாளருக்கும் பொருந்தும்.

காரணம், பொது வேட்பாளர் விடயத்தில், தமிழ் தலைமைகளிடையே ஒற்றுமை இல்லை என்றான பிறகு, அதில் இந்தியாவிற்கு என்ன வேலை? அதிலும் குறிப்பாக, பொது வேட்பாளர் குறித்த முடிவுகள் உள்நாட்டில் எடுக்கப்படாமல், புலம்பெயர்ந்தோர் அமைப்புகளின் தூண்டுதல் காரணமாகவே செயல்படுத்தப்படுகிறது என்ற எண்ணம் இங்கேயே நிலவும்போது, அத்தகைய முயற்சியுடன் இந்தியா எவ்வாறு தன்னை அடையாளப்படுத்திக் கொண்டிருக்கமுடியும்?

### கௌரவ பிரச்சினை

தமிழர் அரசியல் குறித்து தோவலும் அதன் மூலம் இந்தியாவும் சொன்னது சரியா- தவறா, என்ற விவாதத்திற்கு இடமே இல்லாமல், அவர் இந்தியா திரும்பிய அடுத்த நாட்களிலேயே, தமிழ் அரசு கட்சி, தனது கருத்தை பிரகடனப்படுத்தி உள்ளது என்றே சொல்லவேண்டும். வவுனியாவில்கூடிய அந்தக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில், ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்ற கேள்வியின் அடிப்படையில் கட்சி உடைந்து சின்னாபின்னமாகி இருக்கிறது. அல்லது, அதுபோன்ற தோற்றத்தை அந்தக் கட்சி இந்த நிமிடம் வரையிலுமாவது கொடுத்து வருகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை ஆதரிப்பதா அல்லது சஜித் பிரேமதாசாவை ஏற்றுக் கொள்வதா, என்ற கேள்விக்கு அப்பால் சென்று, கட்சி மீண்டும் சிறீதரன், சுமந்திரன் என்ற இரு தலைவர்களிடையேயான உள்கட்சி கௌரவ பிரச்சினையாக வெடித்துள்ளது. ஜனாதிபதி தேர்தலுக்கு முந்தைய காலகட்டத்திலும் நிலைமை அவ்வாறுதான் இருந்தது. அப்போது, கட்சியின் தலைவர் பதவிக்கான தேர்தலில் இரண்டு தரப்பினரும் முரண்டு பிடித்து, விடயம் இப்போது, நீதிமன்றத்தில் அல்லாடுகிறது.

தமிழ் அரசு கட்சி மத்திய குழு, பொது வேட்பாளர் அரியநேத்திரனுக்கு கட்சி கட்டுப்பாட்டை மீறியதாக விளக்கம் கேட்க முடிவு செய்தபோது, சிறீதரனும் அந்த முடிவிற்கு எதிராக கருத்து தெரிவித்ததாக செய்தி இல்லை. ஆனால், அண்மையில், தேர்தலில் யாருக்கு ஆதரவு தெரிவிப்பது என்பது குறித்து முடிவு எடுக்கப்பட்ட கூட்டத்தில் அவர் தரப்பு பொது வேட்பாளரையே ஆதரிப்பதாகக் கருத்துத் தெரிவித்தது.

அதிலும் குறிப்பாக, பொது வேட்பாளருக்கு ஆதரவாக, லண்டனில் பரப்புரை செய்ய சென்றிருந்த சிறீதரன் புறப்படுவதற்கு முன்பாக கடிதம் மூலம் தனது கருத்தை அல்லது முடிவை தெரிவித்து மத்திய குழுவிற்கு தெரிவித்திருந்தார். மறைந்த சம்மந்தன் காலம் தொடங்கி, உள் நாட்டில் தேர்தல் நடைபெறும்போது, வெளிநாட்டில் பரப்புரை செய்யச் செல்வது, தமிழர் அரசியல் தலைமைகளுக்கு வாடிக்கை ஆகி விட்டது. கடந்த காலங்களில் சுமந்திரனும் இதற்கு விதிவிலக்கல்ல.

### அழைப்பா, எச்சரிக்கையா?

இதுஇவ்வாறிருக்க, மத்திய குழு கூட்டத்தில் பங்கேற்காத கட்சியின் தற்காலிக தலைவரான மாவை சேனாதிராஜா, ஜனாதிபதி தேர்தல் குறித்து கட்சி எந்தவித முடிவும் எடுக்கவில்லை என்று சாரப்படும்படி கருத்து தெரிவித்ததாக செய்திகள் வெளியாயின. மத்திய குழுவில் எடுக்கப்பட்ட முடிவு குறித்து, சுமந்திரன் பத்திரிகையாளர் சந்திப்பில் அறிவிப்பதற்கு முன்னர் தன்னிடம் யாரும் அது குறித்து முன்னறிவிப்பு நல்கவில்லை என்பது அவருக்கு வருத்தத்தை கொடுத்ததாகப் பின்னர் விளக்கம் அளிக்கப்பட்டது.

ஆனால், இவ்வாறான செய்திகள் வெளியான அடுத்த நாளே, மத்திய குழுவின் முடிவை செயல்படுத்த கட்சியில் அனைவரும் இணைந்து செயலாற்றவேண்டும் என்று மாவையாரின் பெயரில் அறிவிப்பு வெளியானதாகவும் பத்திரிகை செய்திகள் தெரிவித்தன. இதில் 'அனைவரின்' என்ற பதத்தில், சிறீதரன் வகையறாக்களும் அடக்கம் என்பது சொல்லாமலே புரியும்.

ஒரு விதத்தில், இது சிறீதரன் முதலியோருக்கு விடுக்கப்படும் அழைப்பு. மற்றொரு விதத்தில், இதுவே ஒரு எச்சரிக்கை. அதாவது, சிறீதரன் முதலானோர் தங்களது முடிவில் தொடர்ந்து, அந்த முடிவிற்குச் செயல் வடிவம் கொடுத்தால், கட்சியின் ஒழுங்கு நடவடிக்கை அவர்கள் மீதும் பாயும் என்பதை மாவை சேனாதிராஜா, சொல்லாமல் சொல்லி இருக்கிறார். அதனைத் தொடர்ந்து, கட்சித் தலைமைப் பொறுப்பில் தானே ராஜாதி ராஜாவாக தொடருவேன் என்பதையும் அவர் கோடிட்டுக் காட்டி உள்ளார்.

பத்திரிகை செய்திகளின்படி, இலண்டனில் கட்சி முடிவை குறித்துக் கேள்வி கேட்கப்பட்டபோது, சிறீதரன் மௌனம் சாதித்துள்ளார். உள்வீட்டு குப்பையை நாடு திரும்பிய பின் அலசினால்போதும் என்ற நல்லெண்ணம் ஒருபுறம் இருக்கலாம். மறுபுறம், அவரும், நாடு திரும்பிய பின்னர், உள்கட்சி சண்டையை ஊதி பெரிதாக்கி, கட்சியை தன் வசம் திரும்ப முயலலாம்.

அந்த முயற்சிக்காக அவரிடம் விளக்கம் கேட்டு கட்சி கடிதம் அனுப்பப் போகிறதா என்பதே தற்போதைய கேள்வி. அல்லது, ஜனாதிபதி தேர்தல் வரை காத்திருக்கப் போகிறதா, என்பதும் கேள்வி.

### ஆற்றில் ஒரு கால், சேற்றில் ஒரு கால்

எதுஎப்படியோ, ஜனாதிபதி தேர்தலை முன்னிறுத்தி தமிழ் அரசியல் தலைமைகள் அடிக்கும் கூத்து சொல்லி மாளாது. ஒருபுறம், பொது வேட்பாளருக்கு ஆதரவாக, சிறீதரன், செல்வம் அடைக்கலநாதன், விக்னேஸ்வரன் மற்றும் கிழக்கில் இருந்து குகதாசன் போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு. ஆனால், இந்த ஆதரவு இதுவரை வடக்கில் அரியநேத்திரன் தரப்பு முன்னெடுத்துள்ள பரப்புரையில் எந்தவொரு இடத்திலும், களப்பணியில் தெரியவில்லை.

கேள்வியே, இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், இன்னமும் ஆற்றில் ஒரு கால், சேற்றில் ஒரு கால் என்றுதான் இருக்கிறார்களா? அல்லது, அவர்களது ஆதரவாளர்கள் இந்த விடயத்தில் தங்கள் தலைவர்களின் முடிவில் இருந்து மாறுபட்டு நிற்கிறார்களா? இந்தப் பட்டியலில் சித்தார்தனும்

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

# லாஜிக் இல்லாத லாஜிக்

4ம் பக்க தொடர்ச்சி...........

அடங்குவார். அவரை இதுவரை, தான் ஆதரிக்கும் பொது வேட்பாளரின் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் அதிகம் காண்பதற்கு இல்லை என்றே செய்திகள் தெரிவிக்கின்றன.

என்றாலும், வேட்பாளர்களுக்கான ஆதரவு என்பதில், அரியநேத்திரனுக்கே அதிக எண்ணிக்கையிலான தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இருக்கிறது என்றே கணிக்கத் தோன்றுகிறது. தற்போது தென்னிலங்கையின் ஒரு கணக்கெடுப்பின் அடிப்படையில் நோக்கினால், ரணிலுக்கே அதிக நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இருக்கிறது. அதுவே, மக்களின் ஆதரவாகவும் மாறும் என்பது அவரது தரப்பினரின் கணக்கு. அது உண்மையென்றால், அரியநேத்திரனுக்கு, அதிக எண்ணிக்கையில் தமிழ் வாக்களர் ஆதரவு இருக்கிறது என்றும் விவாதிக்கலாம். இதன் உண்மை தன்மை, தேர்தல் முடிவு வரும்போது தெரியும்.

### நல்லவர்களாயிற்றே

இது இப்படி இருக்க, ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாசவிற்கு ஆதரவு தெரிவிப்பதாக தமிழ் அரசு கட்சி எடுத்த முடிவிலும் முரண்பாடு உள்ளதாகவே தோன்றுகிறது. தேர்தல் அறிக்கையின் அடிப்படையில் நோக்கினால், ஜேவிபி-ன் அனுரகுமார திசநாயக்காவே, தமிழ் தரப்பினரின் எதிர்பார்ப்புகள் குறித்து குழப்பம் இல்லாமல் பேசுகிறார் எனலாம்.

அனுர மட்டுமே, நல்லாட்சி காலத்தில், அன்றைய பிரதமர் ரணில் மற்றும் சுமந்திரன் ஆகியோர் பங்குவகித்த வழி நடத்தல் குழு தயாரித்த சட்டமூலத்தின் அடிப்படையில் புதிய அரசமைப்பு சட்டம் வரையப்படும் என்று தெளிவாகக் கூறி உள்ளார். ரணில், சஜித் இருவரும் இது விடயத்தில் பூசி மெழுகுவதாகவே தோன்றுகிறது.

இது விடயத்தில், அனுரவின் நிலைபாட்டையும் மீறி அவருக்கு எதிரான விடயம் ஒன்றுள்னது. கடந்த 2006-இல் உச்ச நீதிமன்றம், 1987ஆ-ம் ஆண்டு காலத்திய வடக்கு-கிழக்கு மாகாண இணைப்பை இல்லாததாக்கி உத்தரவு பிறப்பித்தது. அனுர தற்போது தலைவராக இருக்கும் ஜேவிபி கட்சியின் மனுவே அதற்குக் காரணம். இப்போதும்கூட, அதுவே அவருக்கு தமிழ் அரசு கட்சி உள்ளிட்ட தமிழர் தரப்பினர் எதிர்ப்பு தெரிவிப்பதற்கு முக்கிய காரணம்.

ஆனால், வடக்கு- கிழக்கு மீள் இணைப்பு குறித்து ரணிலும் சரி, ஏன், சஜித்தும்கூட ஒன்றுமே கூறவில்லை. அது விடயத்தில், நாமல் தேவலை. ஒற்றையாட்சி முறைக்குள்ளான தீர்வு என்ற ஒரே போடாக போட்டு, அதன் மூலம் தமிழர்களின் அனைத்து அபிலாஷைகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்துவிட்டதாகவே தமிழர் தரப்புகள் கருதுகின்றன. ஆனால், அது, ரணில், அதிலும் குறிப்பாக தமிழ் அரசு ஆதரிப்பதாக கூறும் சஜித் தரப்புகளுக்கு பொருந்தாது. வடிவேலு பாஷையில் கூற வேண்டும் என்றால், அவர்கள்தான், நல்லவர்களாயிற்றே!

### கலாசார அழிப்பு

ஆங்கில மொழியில், 'லாஜிக்' என்று ஒரு சொல் உண்டு. தமிழ் அகராதியில் அதற்கு 'தர்க்கம்' மற்றும் 'தர்க்க ரீதி' என்று பொருள். அன்றாட சொல்லாடலில் அதற்கு 'நியாயமற்ற' அல்லது 'ஏற்றுக்கொள்ள முடியாத' என்றெல்லாம் பொருள் கொள்ளலாம். ஜனாதிபதி தேர்தல் குறித்த தமிழ் அரசு கட்சியின் முடிவும் இந்த வகையில் சேரும். அதுவே, பொது வேட்பாளர் அணியினருக்கும் பொருந்தும்.

அரசியல் தீர்வு குறித்த சஜித் பிரேமதாசாவின் நிலைபாட்டை ஏற்றுக்கொள்ளும் தமிழ் அரசு கட்சியின் மத்திய குழு, வடக்கு - கிழக்கு மீள் இணைப்பு மற்றும் போர் குற்றங்கள் குறித்த அவரது கருத்து குறித்து பேசவே இல்லை. அதுவும் குறிப்பாக, கடந்த ஐந்து ஆண்டுகளாக நடைமுறையில் உள்ள, அரசு மற்றும் பௌத்த மதம் சார்ந்த 'தமிழ் கலாசார அழிப்பு' குறித்தும் அவரிடமோ, பிற தமிழரல்லாத வேட்பாளர்களிடமோ எந்தக் கேள்வியும் கேட்கப்படவில்லை.

இன்னும் சொல்லப்போனால், சஜித் கலாசார அமைச்சராக இருந்த போதுதான், நாடு முழுவதும் சாலையோரங்களில் ஆயிரம் புத்தர் சிலைகள் நிறுவும் பணி தொடங்கப்பட்டது. தமிழர் பகுதிகளும் இதற்கு விதிவிலக்கல்ல. அது குறித்து எல்லாம் சுமந்திரன் தரப்பு வாய் திறக்கவே இல்லை.

இவை போதாது என்று, சுமந்திரன், அண்மையில் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ரணிலை 'இனவெறியர்' என்று கூறி உள்ளார். அவரது அரசியல் ஆசானான சம்மந்தன், எந்த சிங்கள தலைவருக்கும் இப்படி பொத்தாம் பொதுவாக பட்டம் சூட்டியது இல்லை. இப்போது, மாகாணசபை தேர்தல் குறித்த சுமந்திரன் முன்வைத்த சட்ட வரைவின் முடிந்த மூன்றாம் வாசிப்பை ரணில் தட்டிகழித்ததற்கே அவருக்கு இவ்வாறான அர்ச்சனை கிடைத்தது. அவர் என்ன, சுமந்திரனை மட்டும் நினைத்துதானா தனது அரசில் முடிவுகளை எடுக்கிறார்?

அவ்வாறானால், நல்லாட்சி அரசு காலத்தில், ரணிலோடு புதி அரசமைப்பு விடயத்தில் இழைந்து இழைந்து செயலாற்றிய சுமந்திரன் இப்போது எங்கே? தான் அப்போது செய்தது எல்லாம் தவறு என்று ஒப்புக் கொள்ளாமலே, ரணில் ஜனாதிபதியான காலம் தொட்டு அவரை ஏன் சுமந்திரன் கரித்துக் கொட்டுகிறார் என்ற கேள்வி எழுகிறது. எதுவோ எங்கேயோ நெருடுகிறது.

சுமந்திரன் இப்படி என்றால், எதிரான சிறீதரனோ, இன்னும் ஒரு படி மேலே போய், இலங்கை உள்ளிட்ட பன்னாட்டு அரசுகள் தடை விதித்துள்ள விடுதலை புலிகள் அமைப்பு ஆதரவு 'நாடு கடந்த அரசாங்கத்தின்' தலைவர் ருத்திரகுமாரனுடன் 'ஆன்லைன்' விவாதத்தில் பங்குபெறுகிறார். அதுவும், இலங்கை அரசை சர்வதேச கிரிமினல் நீதிமன்றத்தின் முன் நிறுத்த வேண்டும் என்பது குறித்து பேசுவதற்கு. ஆனால், இங்கேயோ, அவர் நாட்டின் அரசமைப்பை ஏற்றுக்கொண்டு. அதன் படி நாடாளுமன்ற உறுப்பினராகவும் தொடருகிறார்.

### சர்வதேச ஆதரவு

இவை இப்படி என்றால், பொது வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனம் இதற்கும் ஒரு படி மேல். தமிழர்கள் இறைமையும் உரிமையும் கொண்ட ஒரு தேசிய இனம். இந்த பின்னணியில் ஒற்றை ஆட்சி முறைக்கு உள்ளிட்ட அரசியல் தீர்வை ஏற்க முடியாது என்றெல்லாம் சொல்லும் அந்த விஞ்ஞாபனம், சர்வதேச ஆதரவில் ஒரு இடைக்கால பாதுகாப்பு ஏற்பாடு குறித்தும் பேசி உள்ளது.

இதில், முதல் இரண்டும் தமிழ் மக்களின் வழமையான சொல்லாடலாக மாறி கனகாலம் ஆகி விட்டது. அது போன்றே, சர்வதேச ஆதரவு குறித்த நிலைபாடும். இதில், முதல் இரண்டும் உள் நாட்டு விவகாரமாக பேரினவாத அரசியலுடன் இணைந்தது. ஆனால், பன்னாட்டு முகைமை குறித்து தொடர்ந்து பேசும் தமிழ் மக்கள், குறிப்பாக புலம்பெயர்ந்தோர், இதுவரை சாதித்தது என்ன?

குறிப்பாக, ஐநா மனித உரிமை அமைப்பின் மூலம் இனப்போர் காலத்திற்கு பிந்தைய பதினைந்து ஆண்டுகளில் பெற்றுக்கொண்டதுதான் என்ன? சரி, செப்டெம்பர் 9 தொடங்கவிருக்கும் மனித உரிமை அமைப்பின் கூட்டத்தில் புதிதாக எதனைதான் சாதித்து விடப்போகிறார்கள்?

என்ன, தற்போது, இலங்கை மீது சர்வதேச பொருளாதார தடைகள் வரலாம் என்று, புலம்பெயர்ந்தோர் தரப்பினர் சிலரும், இங்கே சிலருமாக பூச்சாண்டி காட்டத் தொடங்கி உள்ளார்கள். அதனால் மட்டும், கொழும்பு அரசும் தென்னிலங்கை அரசியல் மற்றும் சமூக தலைமைகளும் தரப்புகளும் தமிழர் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளப் போகிறார்களா? தற்போதைய தமிழ் திரைப்பட வழக்காடல் படி, இது என்ன, கம்பி கட்டற வேலை?



காலைக்கதிர் Kalaikkathir

# ஜனாதிபதி தேர்தல் குறித்து சமூக ஊடக மீறல்களை கண்காணிக்கிறது பொலிஸ்

தேர்தல்கள் தொடர்பில் சமூக ஊடகங்களில் இடம்பெறும்மீறல்களைக்கையாள்வது குறித்து பொலிஸ் நிலையங்களிற்கு வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன என தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி தேர்தல் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் பிரசாரங்களின் பிரதானதளமாகசமூகஊடகங்கள்மாறியுள்ளன.

வேட்பாளர்களை இலக்குவைத்து விமர்சனங்கள் குற்றச்சாட்டுகளை முன்வைப் பதற்கும் சமூக ஊடகங்கள் பயன்படுத் தப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

இந்த சூழ்நிலையில் சமூக ஊடகங்கள் குறித்த முறைப்பாடுகளை எவ்வாறு கையாள்வதுஎன்பதுகுறித்தவழிகாட்டுதல்களை பொலிஸ் தலைமையகம் அனைத்து பொலிஸ் நிலையங்களிற்கும் வழங்கியுள்ளது.

சர்ச்சைக்குரியபதிவுகள்மற்றும்அவற்றைநீக்கு வது தொடர்பிலும் பொலிஸ் தலைமை யகம் வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது.

சட்டவிரோத தேர்தல் பிரசாரம், சிஐடியின் கணிணி குற்றப்பிரிவுடன் ஒருங்கிணைப்பது, ஆகியவை குறித்த தெளிவான விளக்கங்களை உள்ளடக்கிய சுற்றுநிரூபமொன்றை பொலிஸ் திணைக்களம் வெளியிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தடைசெய்யப்பட்ட தேர்தல் பிரசார உள்ளடக்கங்கள்பரப்படுபவது,குற்றவாளிகளை அடையாளம் காண்பது தொடர்பில் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளதாக சிரேஸ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

பதிவுகளை அகற்றுவது குற்றமி ழைத்தவர்களிற்கு எதிராக நடவடிக்கைகளை எடுப்பது உட்பட தேர்தல் காலத்தில் சமூக ஊடக விவகாரத்தை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து அனைத்து பொலிஸ்நிலையங்களிற்கும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாக சிரேஸ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் விதிமுறைகள் மீறப்படுவது தொடர்பில் பொலிஸார் சமூக ஊடகங்களை அவதானித்து வருகின் றனர், ஜனாதிபதி வேட்பாளர்களிற்கு எதிரான அச்சுறுத்தல் கள் விமர்சனங்கள் குறித்த பல முறைப்பாடுகளை ஆராய்ந்து வருகின்றோம் என அந்த அதிகாரி தெரிவித் துள்ளார்.(05)




# தெற்கு அதிவேக வீதியில் லொறி கவிழ்ந்து விபத்து

தெற்கு அதிவேக வீதியில் நேற்று (வியாழக்கிழமை) பாரவூர்தி ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து பின்னதுவ மற்றும் இமதுவ ஆகிய பிரதேசங்களுக்கு இடையிலான 95 ஆவது கிலோமீற்றர் மைல்கல் பகுதிக்கு அருகிலேயே இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில், நேற்று காலை முதல் குறித்த வீதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டிருந்தது.

கொழும்பில் இருந்து மாத்தறை நோக்கிப் பயணிக்கும் கனரக வாகனங்கள் மாற்று வழியை பயன்படுத்துமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபை அறிவுறுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# விடுதி அறையில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு பெண் ஒருவர் கொலை

அமந்தொழுவ பகுதியில் விடுதி அறையொன்றில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு பெண்ணொருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக சீதுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் சேரங்கடை பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய பெண்ணொருவராவார்.

கொலைசெய்த சந்தேகநபருடன் குறித்த பெண் அமந்தொழுவ பகுதியில் விடுதி அறையொன்றில் தங்கியிருந்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலும், கொலையினை செய்த சந்தேகநபர் தப்பிச் சென்றுள்ளதுடன், இந்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மெற்கொண்டு வருகின் றனர்.(05)

# ஜனாதிபதி வேட்பாளர் பத்தரமுல்ல சீலரத்ன தேரர் குடாநாட்டில் பரப்புரை

ஜனசெத பெரமுனவின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பத்தரமுல்ல சீலரத்ன தேரர் புதன்கிழமை யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு அருகில் பிரசாரத்தில் ஈடுபட்டார்.

இதன்போது ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கான காரணத்தை விளக்கும் சிங்கள மற்றும் தமிழ் மொழியிலான துண்டுப்பிரசுரங்கள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் உழவு இயந்திர சின்னத்தில் பத்தரமுல்ல சீலரத்ன தேரர் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.(05)

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



காலைக்கதிர் Kalaikkathir

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

# பொதுச்சொத்து துஸ்பிரயோகம் அதிகரிப்பு டிரான்ஸ்பரன்சி இன்டர்நாஷனல் கரிசனை

தேர்தல் பிரசார காலத்தில் பொதுச்சொத்துக்கள் துஸ்பிரயோகம் செய்யப்படுகின்றமை குறித்து டிரான்ஸ்பரன்சி இன்டநஷனல் கடும் கரிசனை வெளியிட்டுள்ளது.

பொதுச்சொத்துக்கள் துஸ்பிரயோகம் செய்யப்படுவது குறித்து 500 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என டிரான்ஸ்பரன்சி இன்டநஷனல் ஸ்ரீலங்காவின் நிறைவேற்று பணிப்பாளர் நதிசானி பெரேரா தெரிவித்துள்ளார்.

300முறைப்பாடுகள்தொடர்பில்ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுச்சொத்துக்கள் துஸ்பிரயோகம் செய்யப்படுவது குறித்து பொதுமக்கள் விரக்தியடைந்துள்ளனர். அரசியல் நோக்கங்களிற்காக பொதுச்சொத்துக்களை பயன்படுத்துபவர்களைபொறுப்புக்கூறலிற்கு உட்படுத்துவது குறித்து மக்கள் ஆர்வமாக உள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.(05)

# இந்தியாவின் ‘தரங் சக்தி’ பயிற்சியில் இலங்கை விமானப்படை பீச்கிராஃப்ட் விமானம் பங்கேற்பு

இலங்கைவிமானப்படைக்கு சொந்தமான பீச்கிராஃப்ட் விமானம் இந்திய விமானப் படையால் ஏற்பாடு செய்யப் பட்ட 'தரங் சக்தி' வான் போர் பயிற்சியில் இணைந்தது. மேலும் இந்த பயிற்சியில் 11 நாடுகளைச் சேர்ந்த சுமார் 150 விமானங்கள் பங்கேற்றன.

'தரங் சக்தி 'விமானப் போர் பயிற்சியின் முதல் கட்டம் 2024 ஆகஸ்ட் 06 முதல் 14 ஆம் திகதி வரை இந்தியாவின் தமிழ்நாடு,சூலூர்விமானப்படை தளத்தில் வெற்றிகரமாக நடத்தப்பட்டதுடன்.

இரண்டாவது மற்றும் இறுதி கட்ட பயிற்சிகள் 14 செப்ரெம்பர் 2024 அன்று ராஜஸ்தானில் உள்ள ஜோத்பூர் விமானப்படை தளத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விமான போர் பயிற்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் இலங்கை விமானப்படையின்பீச்கிராஃப்ட் விமானம் பங்களிப்பை வழங்கியுள்ளது.

பூகோள பாதுகாப்பு ஒத்துழைப்பை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் இந்தியாவால் இதுவரை நடத்தப்பட்ட மிகப்பெரிய சர்வதேசவிமானப்பயிற்சியான 'தரங் சக்தி' பயிற்சியில் இலங்கை விமானப்படை பங்குபற்றுவதன் மூலம் இலங்கை விமானப்படைக்கு சர்வதேச இராணுவ உறவுகளை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் அமைகின்றது .

மேலும் , இலங்கை விமானப்படையின் விமானிகள், விமானப் பணியாளர்களுக்கு இதனூடாகபுதியஅனுபவத்தைப் பெறுவதற்கான வாய்ப்பும் கிடைக்கப்பெற்றது.(05)

பச்சைகுத்த வந்துவிட்டு

# 14 வயது சிறுமியை அழைத்துச்சென்ற நபர் குறித்து பொலிஸார் விசாரணை

தந்தையின் உடலில் பச்சை குத்துவதற்காக வந்த பச்சை குத்தும் நபர், 14 வயது சிறுமியை தன்னுடன் அழைத்துச் சென்ற சம்பவம் தொடர்பில் பேருவளை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பேருவளைபண்டாரவத்தைபிரதேசத்தைசேர்ந்தசிறுமியின் தந்தை செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை,சிறுமியின்தாய்வெளிநாட்டில்இருப்பதாகவும் மகள் தந்தையுடன் வசித்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 2 ஆம் திகதி காணாமல்போன இந்த சிறுமி உறவினர் ஒருவருக்கு தொலைபேசியில் அழைப்பு விடுத்து தன்னை மொரட்டுவையிலிருந்து அழைத்து செல்லுமாறு கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் போது, மொரட்டுவை, உஸ்வத்தையில் உள்ள பச்சை குத்தும் நபரின் வீட்டில் தான் இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் , இந்த சிறுமி களுத்துறை நாகொட போதனா வைத்தியசாலையில் விசேட வைத்திய பரிசோதனைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பேருவளை தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)




காலைக்கதிர் Kalaikkathir

## நாமலின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், தமிழ் மக்களின் உண்மையான வில்லன்கள் யார் என்பதைத் தமிழ் மக்கள் தற்போது புரிந்து கொண்டிருப்பார்கள்.

ரணிலுக்கும் எனக்கும் உள்ள வித்தியாசத்தை தெளிவாக உங்களால் உணர்ந்து கொள்ள முடியும். நான் தமிழ் மக்களுக்கு உண்மையைச் சொல்கிறேன், ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களை நம்பவைப் பதற்காக பொய்சொல்கிறார்.

மாகாண சபை முறைமைகள் விடயத்தில் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி மீண்டும் தனது மக்களை தோல்வியடையச் செய்துள்ளது. ரணில் மீண்டும் தமிழ் மக்களை முட்டாளாக்கியுள்ளார்.

இதேநேரம், இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி தமிழ் மக்களின் நீண்டகாலமான தலைமைக்கட்சி என்ற பாத்திரத்தினை இனி வகிக்க முடியாத நிலையை அடைந்துள்ளது.

அந்தக் கட்சியினர் சஜித்தை ஆதரிக்கும் தீர்மானத்தினை எடுத்துள்ளதன் காரணமாக உட்கட்சிப் பிளவு வலுவாகியுள்ளது. தமிழ் மக்களுக்கான ஏகோபித்த தலைமையை அந்தக் கட்சியினால் வழங்க முடியாத பரிதாமான நிலைமையை அடைந்துள்ளது என்றார்.

## தயாசிறி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தயாசிறி ஜயசேகரவுக்கு எதிராக தடைக் கட்டளையை கொழும்பு பிரதான மாவட்ட நீதிபதி சந்துன்விதான பிறப்பித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவை பிரதிவாதியாக்கும் வகையில் வேலுகுமாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை பரிசீலித்த பின்னர் இந்த தடை உத்தரவை நேற்று நீதிபதி பிறப்பித்தார்.

அக்குரஸ்ஸவில் ஐக்கிய மக்கள் சக்தியால் ஏற்பாடு செய்யப்பட்ட பொதுக்கூட்டத்தில் தயாசிறி ஜயசேகர தெரிவித்த கருத்தின் அடிப்படையில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உண்மைக்குப்புறம்பான மற்றும் தீங்கிழைக்கும் வகையில் பரப்பப்பட்ட இந்தக் கருத்தால் தனது நன்மதிப்புக்கு ஏற்பட்ட இழப்பிற்கு 500 மில்லியன் ரூபா நட்டஈடு வழங்குமாறு மனுவில் கோரப்பட்டுள்ளது.

முறைப்பாட்டில் முன்வைக்கப்பட்ட விடயங்களை பரிசீலித்த மாவட்ட நீதிபதி, தயாசிறி ஜயசேகர முகநூல் பக்கத்திலோ அல்லது ஐக்கிய மக்கள் சக்தியின் முகநூல் பக்கம் உள்ளிட்ட சமூக ஊடகங்களிலோ இது தொடர்பான விடயங்கள் மேலும் வெளிவருவதைத் தடுக்கும் தடை உத்தரவை பிறப்பித்ததுடன், செப்டெம்பர் 19 இது தொடர்பான விடயங்களை முன்வைக்குமாறும் உத்தரவிட்டார்.

## சு.கவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பாளர்கள் குழுவிற்கும் பெரமுனவின் பிரதிநிதிகளுக்கும் இடையில் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

கையொப்பமிடும் நிகழ்வில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் மற்றும் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த உடன்படிக்கையை அங்கீகரிப் பதற்காக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சுமார் 40 தொகுதி அமைப்பாளர்கள் வருகை தந்திருந்தனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய உதித்தலொக்குபண்டார, தற்போது இரு கட்சியினருக்கும் இடையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை பரஸ்பர புரிந்துணர்வுக்குத் தடையாக இருக்கும் என்று யாரும் நினைக்க வேண்டாம்.

உங்களது அமைச்சுப் பதவி எனக்கு வேண்டாம் என்று கூறி ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேறி எதிர்க்கட்சியின் பக்கத்தில் எஸ்.டபிள்யு.டி.பண்டாரநாயக்க அமர்ந்தார். அச்சமயத்தில் டி.ஏ.ராஜபக்சவும் அவருக்குதுணையாக இருந்தார். அதுபோன்று தான் தற்போதைய சமயத்தில் நாம் ஐக்கிய தேசியக் கட்சியின் பின்னால் செல்லாது நாமல் ராஜபக்சவுக்கு ஆதரவாக அவரின் பின்னால் நிற்கின்றோம் என்றார்.

இங்கு கருத்து வெளியிட்ட ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச, பரஸ்பரம் புரிந்துணர்வுகொண்ட இரு தரப்பினர் ஒன்றிணைந்துள்ளோம். இவ்வாறான நிலையில் ஸ்ரீலங்கா பொது ஜனபெரமுன நாட்டுக்கு ஏற்ற கொள்கைகளையே கொண்டுள்ளது.

ஸ்ரீமாவோ அம்மையாரினதும், பண்டாரநாயக்கவினதும் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளும் தரப்பினர் பெரமுனவின் கொள்கையைப் புரிந்துகொள்ளவேண்டும். அவர்கள் தமது மாறுபட்ட கருத்துக்களைத் தவிர்த்து எம்முடன் கரம்கோர்க்க வேண்டும் என்று அழைப்பு விடுகின்றேன் என்றார்.

## இரட்டைவேட ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைந்துள்ள கலைமகள் மைதானத்தில் நேற்று நடைபெற்றது. அநுரகுமார அங்கு உரையாற்றும்போது தெரிவித்ததாவது:

சம்பிக்க ரணவக்க, ரிசாட் பதியூதீன் ஆகியோர் சஜித்துடன் இருக்கின்றனர். சஜித் பிரேமதாச வவுனியாவுக்கும் மன்னாருக்கும் வருகைதரும்போது சம்பிக்க ரணவக்கவை கூட்டிவரமாட்டார். ஆனால், காலிக்கு செல்லும்போது சம்பிக்கவை அழைத்துச்செல்வார். ஆனால், அங்கு ரிசாட் பதியூதீனை அழைத்துச் செல்லமாட்டார். என்ன அரசியல் இது? இதுதான் இரட்டை அரசியல்.

கொள்கை இருப்பது தேசிய மக்கள் சக்தியிடம் மாத்திரமே. நாங்கள் அனைத்து இனமக்களின் உரிமைகளை உறுதிசெய்யும் புதிய ஒரு அரசமைப்பை உருவாக்குவோம். பிரதேச சபைகளில் இருந்து அதிகாரப் பகிர்வை வழங்கும்படியான ஓர் அரசமைப்பு உருவாக்கப்படும்.

இனவாதத்தினை மூலதனமாக்கி ஆட்சியினை பெற்ற மொட்டு கட்சி இன்று சுக்குநூறாகிப்போயுள்ளது. இனவாதம் சாதிவாதத்துக்கு தேசிய மக்கள் சக்தியில் இடமில்லை. இப்போதே இந்த நாட்டை கட்டியெழுப்ப ஆரம்பிக்கவேண்டும். விவசாயத்தை பாதுகாக்கவேண்டும். உங்கள் ஆபரணங்கள் எங்கே? அவை வங்கிகளில் இருக்கின்றன. எனவே இந்த விவசாய கடன்களை தள்ளுபடி செய்யவேண்டும். விதை ஆராய்ச்சி நிலையங்களை புதுப்பிக்கவேண்டும்.

போதைப்பொருள் பின்புலத்தில் இருப்பது அரசியல்வாதிகளே. அது உங்கள் குழந்தைகளை பாதிக்கும். கிராமத்தை பாதிக்கும். அதனை முழுமையாக நாம் தடுத்து நிறுத்துவோம்.

எங்களுக்கு எவ்வாறான ஒரு ஆட்சி தேவை. தெற்கில் சிங்கள மக்களின் பெரும்பான்மை பெற்ற அரசாங்கமா அல்லது வடக்கு மக்களின் பங்களிப்பு இல்லாத ஆட்சியா? அப்படியான அரசு எமக்கு தேவையில்லை.

வடக்கு, கிழக்கு, தெற்கு மக்களின் நம்பிக்கையினை வென்ற ஒரு ஆட்சியே எங்களுக்குத் தேவை. இதற்கு முந்தைய ஜனாதிபதிகள் உருவானது தெற்கில் இருந்து மட்டுமே. இம்முறை வடக்கு, கிழக்கு, தெற்கு மக்கள் இணைந்து தேசிய மக்கள் சக்தியை வெற்றிபெறச் செய்யவேண்டும்.

ரணில் கடைசி நேரத்தில் என்ன செய்வாரோ என்று கூறுகின்றனர். ஒன்றுமில்லை. அவர் தோல்வியடைவார். சத்தமில்லாமல் வீடுசெல்வார். அது அவருக்குப் பழக்கப்பட்ட ஒன்று.

இந்தக் கள்வர்களை, நாட்டையும் பொருளாதாரத்தையும் சீர்குலைத்தவர்களை, போதைப்பொருள் வியாபாரிகளை, உலகத்திடம் எங்களை அவமானப்படுத்தியவர்களை, போரை உருவாக்கியவர்களை, மூவின மக்களிடையில் சண்டைகளை உருவாக்கியவர்களை என அனைவரையும் ஒன்றாகத் தோற்கடித்து நாட்டை பசுமையாக்கி மக்களின் வாழ்க்கையினை அழகாக்கும் ஒரு புதிய அரசை கொண்டுவருவதற்காக நாம் பாடுபடுவோம் என்றார்.

## விஜயதாச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றம், தேர்தல் முறையில் திருத்தம், மனித உரிமைகள், தோட்டத்தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை. அரசவரி கொள்கையைத் திருத்தியமைத்தல், கல்வி. சுகாதாரம் உள்ளிட்ட பல திட்டங்கள் குறித்து அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வமத தலைவர்களின் ஆசிர்வாத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்வில், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்கள் தொகுதி அமைப்பாளர்கள், மதத்தலைவர்கள். புத்திஜீவிகள், சிவில் அமைப்பினர். வியாபாரிகள் என பல தரப்பினர்கள் கலந்துகொண்டிருந்தனர். ஆரம்பமாக ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாச ராஜபக்ஷ் தேர்தல் விஞ்ஞாபனத்தை மதத்தலைவர்கள் மற்றும் புத்திஜீவிகளுக்கு கையளித்து, அதன் உள்ளடக்கம் தொடர்பிலும் நாட்டின் தற்போதைய தேவைப்பாடுகள் தொடர்பிலும் விஜயதாச ராஜபக்ச உரையாற்றினார்.

சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இருந்து வந்த ஏற்பாடுகளுக்குச் சமமான ஏற்பாடுகள் அரசமைப்பில் உள்வாங்கப்படாமை, செனட் சபை முறைமையை நீக்கி அதன் அதிகாரத்தை நாடாளுமன்றத்துக்கு வழங்கியமை, அரச சேவை ஆணைக்குழுவை நீக்கி, அதன் அதிகாரத்தை அமைச்சரவைக்கு வழங்கியமை போன்ற காரணங்களால் நாட்டில் தேசிய ஐக்கியம் வீழ்ச்சியடைந்தது. அரசபொறிமுறை அரசியல் மயமாக்கப்பட்டது. அதனால் மக்களால் அந்த ஆட்சி தோற்கடிக்கப்பட்டு 1977இல் புதிய ஆட்சி ஒன்று அமைக்கப்பட்டது.

அந்த ஆட்சிக்குக் கிடைக்கப்பெற்ற பெரும்பான்மை பலத்தைப் பயன்படுத்திக் கொண்டு 1978ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசமைப்பு அமைக்கப்பட்டது. என்றாலும் இந்த அரசமைப்பில் அறிமுகப்படுத்திய நிறைவேற்று ஜனாதிபதி முறைமை, விகிதாசார தேர்தல் முறை, திறந்த பொருளாதாரக் கொள்கை போன்ற விடயங்கள் ஆட்சியாளர்களின் துஸ்பிரயோகம் காரணமாக நாடு வங்குரோத்து அடைந்தது. அதனால் அனைத்து இன மக்களுடனும் கலந்துரையாடப் புதிய அரசமைப்பின் தேவைப்படுகிறது.

அத்துடன் இனங்களுக்கிடையில் ஐக்கியம் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் இன முரண்பாடுகள் ஏற்படுவதைத் தடுப்பதற்கும் ஒவொரு கிராம சேகவர் பிரிவிலும் மதத்தலைவர்களை உள்ளடக்கிய குழு ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரசமைப்பின் பொருள்கோடல்கள் தொடர்பில், அடிக்கடி எழும் சிக்கல்களுக்குக் குறுகிய காலத்தில் தீர்வு காண அரசமைப்பு நீதிமன்றம் ஒன்றை ஏற்படுத்த நடவடிக்கை, விகிதாச்சார தேர்தல் முறையிலிருந்துவரும் மோசடிகளை இல்லாதொழிக்கும் வகையில் தேர்தல் முறையில் திருத்தம் மேற்கொள்ளல் போன்ற விடயங்கள் இந்தத் தேர்தல் அறிக்கைல் பிரதானமாக உள்ளாக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று தோட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் அவர்களின் வாழ்க்கைச்செலவுக்கு ஏற்ற வகையில் ஊதியத்தைப் பெற்றுக்கொடுக்கவும் வீட்டுப்பிரச்சினைக்குத் தீர்வுகாண விசேட வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. நிதி கொள்கை, வெளிநாட்டுக் கொள்கை, அரசவரிக்கொள்கை போன்ற விடயங்களை இலகுவன முறைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வரியில்லாத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உணவகங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

இதற்குள் வன் வேல்ட் (One World), சைனா டியூட்டி பிஃரீ குரூப் (China Duty Free Group) மற்றும் பிளமிங்கோ (Flemingo) ஆகியவை இந்த வர்த்தகத் தொகுதியில் தங்கள் செயல்பாடுகளை ஆரம்பித்திருக்கின்றன.

பெயர் பலகையை திரைநீக்கம் செய்து, வணிகவளாகத்தை திறந்துவைத்த ஜனாதிபதி, அதனைச் சுற்றிப் பார்த்தார். நிகழ்வில் அவர் தெரிவித்ததாவது:

துறைமுக நகரத்தில் இந்த வரியில்லா வர்த்தகதொகுதி திறந்துவைக்கப்பட்டுள்ளமை மிக முக்கியமானதாகும். இலங்கையின் சுற்றுலா துறை உலக அளவில் பிரசித்தம் பெற்றுள்ளது. இந்த வர்த்தகக் கட்டட தொகுதி இருப்பதால் சுற்றுலாப் பயணிகள் இங்கு வருவார்கள். அவர்களுக்குத் தேவையான பொருட்கள் கிடைக்கும் வகையில் வணிக வளாகங்களை நிர்மாணித்து இந்த துறைமுக நகரத்தை மேம்படுத்தியுள்ளோம். இது துறைமுக நகரத்தின் ஆரம்பமாக மட்டுமே அமையும்.

துறைமுக நகரை இவ்வாறு அபிவிருத்தி செய்ய முடியும் என்ற நம்பிக்கை இரண்டு வருடங்களுக்கு முன்னர் எமக்கு இருக்கவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுடன் நாட்டில் பொருளாதார உறுதிப்பாட்டை ஏற்படுத்தியதன் காரணமாகவே இன்று இப்பணியைச் செய்ய முடிந்துள்ளது.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் கடன் வழங்கிய 18 நாடுகளுடன் இந்த வேலைத் திட்டத்தை தொடர்வதற்கு நாம் உடன்படிக்கை செய்துள்ளோம். அந்த ஒப்பந்தங்களை மாற்றாமல் தொடர்ச்சியாக கொண்டுச் சென்றால் இலங்கைக்கு நல்ல எதிர்காலம் கிட்டும். அந்த உடன்படிக்கைகளில் திருத்தம் செய்ய முற்பட்டால், எதிர்காலம் கேள்விக்குறியாகும்.

குறிப்பாக 100 நிறுவனங்கள் இன்று துறைமுக நகரம் குறித்துக் கவனம் செலுத்தியுள்ளன. அதில் 74 நிறுவனங்கள் இந்த வருட இறுதிக்குள் இலங்கையில் முதலீடு செய்யவுள்ளன. மேலும், கொழும்பு கோட்டையில் புதிய சுற்றுலா வலயத்தை ஆரம்பிக்க உள்ளோம். இதனால், இப்பகுதிகளுக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

பொலிஸ் தலைமையகம் இடம் மாற்றப்பட்டுள்ளது. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சும் புதிய கட்டடத்திற்கு மாறுகிறது. குடியரசு சதுகத்தையும் புதுப்பித்து, அந்தப் பகுதியை சுற்றுலா வலயமாக மாற்ற எதிர்பார்க்கப்படுகிறது.

அதேநேரம் பழைய தபால் நிலைய கட்டடத்தையும் சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கு பயன்படுத்த முடியும். பழைய துறைமுகம் மற்றும் அதன் இறங்குதுறை மற்றும் பழைய சுங்கக் கட்டடம் உள்ளிட்ட அனைத்தையும் சுற்றுலா அபிவிருத்திக்குப் பயன்படுத்த முடியும்.

கடற்படைத் தலைமையகம் தற்போது அக்குரேகொடைக்கு மாற்றப்பட்டுள்ளதால், பழைய இடத்தில் புதிய ஹோட்டல்களை அமைக்கலாம். தற்போதுள்ள ஜனாதிபதி மாளிகையை சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தி விரிவான சுற்றுலாத்துறையை உருவாக்கத் திட்டமிட்டிருக்கிறோம்.

இந்த நாட்டை அபிவிருத்தி செய்ய சுற்றுலா பயணிகளை அதிக அளவில் அழைத்து வர வேண்டும். அதன் மூலம் ஈட்டும் வருமானத்தையும் அதிகரிக்கவேண்டும்.

இரண்டு வருடங்களில் இப்படியொரு வணிக வளாகத்தை ஆரம்பிக்க முடிந்ததற்கு பெருமைப்பட வேண்டும். 7000 சதுர மீட்டருக்குள் 3 உலகப்புகழ்பெற்ற நிறுவனங்கள் இங்கு நிறுவப்பட்டுள்ளன. இன்னும் பல நிறுவனங்கள் வரக் காத்திருக்கின்றன. நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையை பாதுகாத்து முன்னேறி இந்தத் துறைமுக நகரை உலகப்புகழ் பெற்ற மையமாக மாற்றுவோம்- - என்றார்.

## அரசியல்வாதிகள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனசெத முன்னணியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான பத்தரமுல்ல சீலரத்ன தேரர் தெரிவித்தார்.

மன்னார் பஸ் நிலையத்தில், நேற்றைய தினம் மக்கள் மத்தியில் மேற்கொண்ட தேர்தல் பரப்புரையின்போதே ஜனசெத முன்னணியின் தலைவரும், ஜனாதிபதி வேட்பாளருமான பத்தர முல்லை சீலரத்ன தேரர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் ஊடகங்களுக்கு மேலும் கருத்து தெரிவித்ததாவது:

தமிழ் அரசியல் கட்சிகள் சஜித் பிரேமதாசவுக்கு தங்கள் ஆதரவை வழங்கி ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளனர். இங்கு சஜித் பிரேமதாச மட்டுமல்ல ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உட்பட அனைத்து அரசியல் கட்சிகளுமே கூட்டணிகள் உருவாகும்போது ஒப்பந்தங்களைச் செய்துவிட்டுப் பின்னர் தூக்கி எறிந்து விடுவார்கள்.

அநுரகுமார திஸாநாயக்க, நாமல் ராஜபக்ச, திலிப் ஜயவீர போன்றவர்களும் அவ்வாறானவர்களே. இவ்வாறான தலைவர்களைத் தேர்வு செய்தால் மேலும் பாதிப்படைவது வடக்கு, கிழக்கு மக்களே.

சுமந்திரன் போன்றவர்கள் அதிகாரத்தைப் பெற என்னவேண்டுமானாலும் செய்வார்கள். அவர்களின் பிள்ளைகள் வெளிநாடுகளில் சிறப்பான வாழ்க்கை வாழ்கிறார்கள்.

வடமாகாணத்தில் வாழும் அப்பாவித் தமிழர்களுக்கு இதுவரை எந்த தீர்வும் எட்டவில்லை. அப்பாவிப் பொது மக்களை வைத்து அவர்கள் அரசியல் செய்கிறார்கள். எனவே, தமிழ் மக்கள் சிந்தித்து உங்கள் வாக்குகளை டிரக்டர் சின்னத்துக்கு அளிக்க வேண்டும் என்றார்.

# தூர இடங்களில் இருந்து வரும் நோயாளரின் பராமரிப்பாளர்கள் தங்கவும் இனி இடவசதி

## செய்து கொடுக்கிறது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை

வெளிமாவட்டங்களிலிருந்தோ அல்லது யாழ். மாவட்டத்தின் தீவுப்பகுதியிலிருந்தோ யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் விடுதியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருக்கும் நோயாளிகளை பராமரிக்கும் குடும்ப அங்கத்தவர்களுக்கு தங்குமிட வசதி கட்டணமின்றி வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த தங்குமிட வசதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலிருந்து 600 மீற்றர் தூரத்தில் இல 76, வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ளது.

இந்த வசதியை பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உள்ள நோயாளர் பராமரிப்பு சேவை நிலையத்துடன் அல்லது 0761000046 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும்.

இந்த சேவையை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நலன்புரிச்சங்கமும், சைவத்தமிழ் நிறுவகமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளார்கள் என போதனாவைத்திய சாலை நலன்புரிசங்கம் அறிவித்துள்ளார்கள்.

(05)

# திருகோணமலை, தம்பலகாமம் பகுதியில் வீடு தீப்பற்றியதில் முற்றாக எரிந்து நாசம்





திருகோணமலை, தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீரா நகர் கிராம சேவகர் பகுதியில் வீடொன்று புதன்கிழமை தீப்பற்றியதில் முற்றாக எரிந்து நாசமாக்கப்பட்டுள்ளது.

குறித்த வீட்டில் வாடகைக்காக வசித்து வந்த நிலையில் பல இலட்சக் கணக்கு பெறுமதியான உபகரணங்கள் எரித்து சாம்பலாகியதாக வீட்டில் குடியிருந்த பிரதான குடியிருப்பாளர் தெரிவித்தார். மின் ஒழுக்கு ஏற்பட்டதால் தீச்சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

குறித்த வீட்டின் உரிமையாளர் வெளிநாட்டில் வசிப்பதாகவும் வாடகை வீட்டில் இருந்த நபர்களின் உபகரணங்களே தீப்பற்றி நாசமாகியுள்ளன.

சம்பவ இடத்துக்கு மீரா நகர் கிராம சேவையாளர் சென்று களநிலவரங்களை அறிந்து கொண்டார்.

இச் சம்பவத்தில் உயிர்ச் சேதம் எதுவுமில்லை எனவும் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரனைகளை தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.(05)

# இலங்கையில் தமிழக மீனவர்களுக்கு ரூ.5.40 கோடி அபராதம்: பிரதமர் மோடி நடவடிக்கை எடுக்க தலைவர்கள் வலியுறுத்தல்

இலங்கையில் சிறைபிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை வழக்கில் இருந்து விடுவிக்கவும், அபராதத்தில் இருந்து அவர்களை பாதுகாக்கவும் பிரதமர் மோடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுதொடர்பாக பிரதமருக்கு முதல்வர் ஸ்டாலின் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், பாமக கட்சி தலைவர்கள் வலியுறுத்தி உள்ளார்.

தூத்துக்குடி, தருவைக்குளத்தில் இருந்து கடந்த ஜூலை 21ஆம் திகதி ஒரு படகில் 12 பேர் மீன்பிடிக்க சென்றனர். அதேபோல, 23 ஆம் திகதி 10 மீனவர்கள் மீன்பிடிக்க சென்றனர். அவர்கள் 22 பேரும் நடுக்கடலில் மீன்பிடித்து விட்டு கடந்த 5 ஆம் திகதி திரும்பி வந்து கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் எல்லைதாண்டிநுழைந்ததாககூறி 22 மீனவர்களையும், 2 படகுகளையும் சிறைபிடித்து சென்றனர். 22 மீனவர்கள் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணையில் முதலில் 12 மீனவர்களுக்கு தலா ரூ.42 லட்சம் அபராதம் செலுத்தவும், அப்படி செலுத்த தவறினால் 6 மாத சிறை தண்டனை விதித்தும் தீர்ப்பு கூறப்பட்டது. இந்த தீர்ப்பின்படி 12 பேருக்கும் ரூ.5.40 கோடி அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மற்றொரு படகில் இருந்த 10 மீனவர்கள் மீதான வழக்கு விசாரணையில் இருக்கிறது. அவர்களுக்கும் அபராதத் தொகை விதிக்கப்படும் என்று தெரிகிறது. இதற்கு தமிழக அரசியல் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள் ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் கூறியுள்ளதாவது -

தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை: இலங்கையில் தமிழக மீனவர்களுக்கு ரூ.5.40 கோடி அபராதம் விதிக்கப்பட் டிருப்பது தமிழக மீனவர்களிடம் கடும் அதிர்ச்சி, மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது. இதை மோடி அரசு வேடிக்கை பார்ப்பது மிகவும் கண்டனத்துக்கு உரியது. கடந்த 2016 ஆம் ஆண்டு 2 நாட்டு மீனவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக கூட்டுநடவடிக்கை குழு அமைக்கப்பட்டது. இதில் இரு நாட்டு வெளியுறவு துறை செயலர்கள், அதிகாரிகள், தமிழக பிரதிநிதிகள் இடம்பெற்றிருந்தனர். இந்த குழு கடந்த 2020 ஜனவரிக்கு பிறகு இதுவரை கூட்டப்படவே இல்லை. 6 மாதத்துக்கு ஒருமுறை இக்குழு கூடி மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும். நடுக்கடலில் மீனவர்கள் தாக்கப்படும்போது, இதுகுறித்து தகவல் தெரிவிக்க ஹாட்லைன் அமைக்கப்பட்டது. அதுவும் இப்போது செயல்படவில்லை. எனவே, பிரதமர் மோடி உடனடியாக தலையிட்டு தமிழக மீனவர்களை வழக்கில் இருந்து விடுவிப்பதோடு, அபராதம் செலுத்துவதில் இருந்தும் மீனவர்களை பாதுகாக்க வேண்டும். இதுதொடர்பாக பிரதமர் மோடியிடம் முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்த வேண்டும்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் முத்தரசன்: இலங்கை நீதிமன்றம் தமிழக மீனவர்களை தண்டனை விதித்து தாக்குதல் நடத்தும் நிலைக்கு சென்றிருப்பது பெரும் கவலை அளிக்கிறது. மத்திய அரசு உடனடியாக இலங்கை அரசுடன் நேரடி பேச்சு நடத்தி மீனவர்களின் மீன்பிடி உரிமையை பாதுகாக்க வேண்டும். இலங்கை நீதிமன்ற உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்ய, தூதரகம் மூலமாக மத்திய அரசு சட்டரீதியான உதவி செய்ய வேண்டும். பாதிக்கப்பட்ட மீனவர்களின் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்க வேண்டும்.

பாமக தலைவர் அன்புமணி: பாரம்பரியமாக மீன் பிடிக்கும் பகுதிகளில் மீன் பிடித்ததற்காக தமிழக மீனவர்களை இலங்கை அரசு கைது செய்வதையும், சிறையில் அடைப்பதையும் இந்திய அரசு வேடிக்கை பார்க்க கூடாது. இலங்கை அரசின் வாழ்வாதார ஒழிப்பு சதிக்கு மத்திய அரசு உடனே முடிவு கட்ட வேண்டும். மிகக்குறுகிய பரப்பளவை கொண்ட தமிழக - இலங்கை கடல் எல்லையை இரு தரப்பு மீனவர்களும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் பகிர்ந்து கொண்டு மீன் பிடிப்பதுதான் இந்த சிக்கலுக்கு தீர்வு ஆகும். கடந்த காலங்களில் பலமுறை இத்தீர்வு முன்வைக்கப் பட்டுள்ளது. இதை உணர்ந்துகொண்டு, தமிழக மீனவர்கள், இலங்கை மீனவர்கள், தமிழக அரசு, இலங்கை அரசு ஆகியவற்றின் பிரதிநிதிகள் பங்கேற்கும் பேச்சுகளுக்கு மத்திய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். இவ்வாறு அவர்கள் தெரிவித்து உள்ளனர்.(05)



# மன்னாரில் இடம்பெற்ற தபால் மூல வாக்களிப்பு



இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதியை தெரிவு செய்யும் ஜனாதிபதி தேர்தலின் தபால் மூல வாக்களிப்பு புதன்கிழமை ஆரம்பமாகி வியாழக்கிழமையும் 2 ஆவது நாளாக இடம்பெற்று வருகின்றது.

தபால் மூல வாக்களிப்பிற்கென டையாளப்படுத்தப்பட்டுள்ள அரச திணைக்களங்களில் நேற்று காலை தொடக்கம் அரச உத்தியோகத்தர்கள் தபால்மூலவாக்குகளைசெலுத்தினர்.

மன்னார்மாவட்டத்தைபொறுத்த வரையில் அதிகாலை தொடக்கம் வாக்கு பதிவுகள் மந்த கதியில் இடம்பெற்று வருவதுடன் அரச அதிகாரிகள் வாக்களிப்பில் ஆர்வம் இல்லாமல் காணப்படும் நிலை அவதானிக்கப்பட்டுள்ளது.

இம்முறை சமர்ப்பிக்கப்பட்ட ஏற்றுக்கொள்ளக்கூடிய தபால் வாக்குகளின் மொத்த எண்ணிக்கை 712,319 ஆகும்.

வாக்களிக்கத் தகுதி உள்ள வாக்காளர்கள் அனைவரும் தபால்மூல வாக்களிப்பில் கலந்துகொண்டு வாக்களிக்குமாறு தேர்தல் ஆணைக்குழு கேட்டுக் கொண்டது. (05)

# யாழ்ப்பாணத்தில் சுமுக தபால்மூல வாக்களிப்பு





இலங்கையில் நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு புதன்கிழமை உத்தியோகபூர்வமாக ஆரம்பமானது.

மாவட்ட செயலக அலுவலகங்கள், தேர்தல் ஆணைய அலுவலகங்கள், மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் மற்றும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகங்கள், பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகங்கள், பொலிஸ் நிலையங்கள், சிறப்பு அதிரடிப்படை முகாம்கள், சிறப்பு காவல் பிரிவுகள் மற்றும் விஜபிகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு தபால் மூலம் வாக்களிக்க முடியும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

அந்தவகையில் யாழ்ப்பாணம்-வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் அமைக்கப்பெற்றுள்ள வாக்களிப்பு நிலையத்தில் வியாழக்கிழமை ஆசிரியர்களுக்கான அஞ்சல் வாக்களிப்பு இடம்பெற்றது.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# மீண்டும் தவணையிடப்பட்டது முல்லை தியோகுநகர் வழக்கு

முல்லைத்தீவு தியோகு நகரில் அவலோன் நிறுவனத்தின் அடாவடியை எதிர்த்து பொதுமக்கள் போராடியமை தொடர்பான வழக்கு வியாழக்கிழமை நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

முல்லைத்தீவு - தியோகு நகர்ப் பகுதியில் கடந்த 26.05.2024 அன்று கரைதுறைப்பற்று பிரதேச சபைக்குரிய மக்கள் பயன்பாட்டிலுள்ள வீதியை அவலோன் எனப்படும் தனியார் நிறுவனம் அடாவடியாக வேலியிட்டு தடுத்தமையால், அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள், முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர் அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன் ஆகியோர் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், அடாவடியாக வீதியை தடுத்து அமைக்கப்பட்ட வேலியையும் அப்புறப்படுத்தியிருந்தனர்.

இந்நிலையில், இது தொடர்பில் முல்லைத்தீவு நீதிமன்றில் தொடரப்பட்டுள்ள வழக்கு 20.06.2024 அன்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோது, இந்த விவகாரங்களுடன் தொடர்புடைய முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர் அன்ரனி ஜெயநாதன், பீற்றர் இளஞ்செழியன், தியோகு நகர் கிராமமக்கள், அவலோன் நிறுவன முகாமையாளர் உள்ளிட்டவர்களை சொந்தப் பிணையில் செல்ல நீதிமன்றம் உத்தரவிட்டதுடன், இந்த வழக்கு மேலதிக விசாரணைக்காக 05.09.2024 என திகதியிடப்பட்டிருந்தது.

அதனையடுத்து, நேற்று இந்த வழக்கு முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் எடுத்துக்கொள் ளப்பட்டிருந்தது.

இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக சட்டத்தரணிகள் வாதாடி 12.12.2024 என்கிற திகதிக்கு மீண்டும் தவணையிடப்பட்டுள்ளது.

1983 ஆம் ஆண்டுக்கு முற்பட்டே தியோகு நகர் கிராமம் உருவாக்கப்பட்டு 200 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அங்கே வசித்து வருகின்றன. இவர்களின் வாழ்வாதாரம் கடற்றொழிலாகும். இக்கிராமம் உருவாக்கப்பட்டது தொடக்கம் கடலுக்கு செல்லும் பாதை அக்கிராமத்தினூடாகவே அமைக்கப்பட்டு பயன்பாட்டிலுள்ளது.

திடீரெனதனியார்நிறுவனம்இதுதங்களுடையகாணி எனஉரிமைகோரிமக்கள்அப்பாதையூடாககடற்கரைக்கு செல்லாதவாறு பாதையை மறித்ததன் பின்னரே மக்கள் போராடி வீதித்தடையை அகற்றியிருந்தார்கள்.

அதனையடுத்து, இந்த கிராமத்துடன் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் விரைந்து, அது பிரதேச சபைக்கு சொந்தமான வீதி என கடிதம் வழங்கியிருந்தார்கள். ஆனால், தனியார் நிறுவனத்தினர் மக்கள் மீதும் இந்த கிராம காணி தமக்கானது எனக் கூறியும் முறைப்பாடு செய்ததோடு வழக்கொன்றும் பதிவுசெய்திருந்தனர்.

இந்த வழக்கு முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக சேவகர் பீற்றர் இளஞ்செழியன், கிராம மக்கள் உட்பட 13 நபர்களுக்கு எதிரானது என்பது குறிப்பிடத் தக்கது.(05)

# மாதகல் கடலில் காணாமல்போன இளைஞனின் சடலம் கடலில் மீட்பு

மாதகலில்இருந்துபுதன்கிழமை அதிகாலைகடற்றொழிலுக்குசென்ற இளைஞர்கள் பயணித்த படகு நீரில் மூழ்கி விபத்துக்குள்ளானது. இந்நிலையில் ஒருவர் பாதுகாப்பாக கரைசேர்ந்துள்ளதுடன்மற்றையவர் காணாமல் போயுள்ளார். இவ்வாறு காணாமல் போனவரின் சடலம் நேற்று காலை கரையொதுங்கியது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

இரண்டு இளைஞர்கள் புதன்கி ழமைஅதிகாலைஇவ்வாறுகடற்றொ ழிலுக்கு சென்றுள்ளனர். அவர்கள் பயணித்த படகு திடீரென விபத்துக் குள்ளானது. இந்நிலையில்படகில் பயணித்த ஒருவர் நீந்திக்கொண் டிருந்தவேளைஅருகேவந்தபடகின் உதவியுடன்காப்பாற்றப்பட்டுள்ளார். மற்றைய இளைஞர் காணாமல் போனார். இவ்வாறு காணாமல் போனவரின் சடலம் நேற்று கரையொதுங்கியது.

மாதகல் பகுதியை சேர்ந்த நாகராஜா பகீரதன் என்ற 21வயது டைய இளைஞரே இவ்வாறு சடல மாக மீட்கப்பட்டுள்ளார்.

(05)

# வெளிநாட்டு மதுப் போத்தல்களுடன் கட்டுநாயக்காவில் ஒருவர் கைது

கட்டுநாயக்க விமான நிலையத்தின் வாகன தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சிறிய லொறியொன்றில்சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான 118 வெளிநாட்டு மதுபான போத்தல்களை மறைத்து வைத்திருந்த கடத்தல்காரர் ஒருவர் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு-13 பிரதேசத்தில் வசிக்கும் மதுபான வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள வர்த்தகர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து லேபிள்-5 ரக விஸ்கி போத்தல்கள் 99 , ப்ளெக் லேபிள் ரக விஸ்கி போத்தல்கள் 14 மற்றும் வெட்-69 ரக விஸ்கி போத்தல்கள் 05 என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர், கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகை தரும் பயணிகள் கொண்டு வரும் மதுபான போத்தல்களை விமான நிலைய வாகன தரிப்பிடத்தில் வைத்து குறைந்த விலைக்கு கொள்வனவு செய்து, பின்னர் அவற்றை பல்வேறு பிரதேசங்களில் உள்ள சுற்றுலா ஹோட்டல்களுக்கு விற்பனை செய்வதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும் , கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் இன்று வியாழக்கிழமை ஆஜர்படுத்தப்படவுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.(05)

# ஐங்கரன் விக்கினேஸ்வராவின் நூல்கள் லண்டனில் வெளியீடு

லண்டன்மாநகரில்ஐங்கரன் விக்கினேஸ்வராவின் நான்கு நூல்கள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் வெளியிடப்பட உள்ளன.

பாலஸ்தீனம்எரியும்தேசம், ஓர்மத்தின்உறைவிடம்இஸ்ரேல், தேசிய சுயநிர்ணயமும் ஐரோப்பிய சிறுபான்மை இனங்களும், இலங்கை இதழியலில் சிவகுருநாதன், ஆகிய

ஐங்கரன் விக்கினேஸ் வராவின் நான்கு நூல்கள் வெளியீடு லண்டன் ஈலிங் அம்மன் கோவில் மண்டபத்தில் நடைபெற உள்ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதி ஒக்ரோபர் 2024 சனிக்கிழமை மாலை 16.00 முதல் 18.30 மணி வரை இவ் வெளியீட்டு நிகழ்வு நடைபெற உள்ளது.

இந்நிகழ்வின் தலைமையுரையை இங்கிலாந்து சைவமன்றங்களின் காப்பாளர் சிவா தம்பு வழங்குவார்.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் வாழ்த்துரையை ஈழத்தின் மூத்த ஆவணக் காப்பாளர் பத்மநாப ஐயர், மற்றும் சி.கிருபாகரன், சண்முகதாசன் ஆகியோர் வழங்குவர்.

பாலஸ்தீனம் எரியும் தேசம் நூல் அறிமுகவுரையை பா. நடேசன் நிகழ்த்துவார். அதன்பின் ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல் நூலின் அறிமுகவுரையை நா. சபேசன் ஆற்றுவார்.

தேசிய சுயநிர்ணயமும் ஐரோப் பிய சிறுபான்மை இனங்களும் நூலின் அறிமுகவுரையை டாக்டர் வே. ரவிமோகன் ஆற்றுவார். அத்துடன் இலங்கை இதழியலில் சிவகுருநாதன் நூலின் அறிமுக வுரையை கோவிலூர் செல்வராஜன் ஆற்றுவார்.

அத்துடன் இந்நூல் வெளியீட்டில் ஈழத்து சிற்றிதழ்கள் பற்றிய சிறப்புரையை திருமதி மாதவி சிவலீலன்வழங்குவார்.லண்டன் மாநகரில் நிகழும் இந்நூல் வெளியீட்டின் ஏற்புரையை ஐங்கரன் விக்கினேஸ்வரா நிகழ்த் துவார்.(05)

# முக்கிய அறிவிப்பு

ஜனாதிபதி தேர்தலில் வாக்களிப்பதற்காக அரச மற்றும் தனியார்துறை ஊழியர்களுக்கு விசேட விடுமுறை வழங்கப்படும் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.(05)

# யாழ். இந்தியத் துணைத் தூதுவர் சந்திரகுமாருடன் தனிச் சந்திப்பு



யாழ்ப்பாணம்இந்தியதுணைத்துதுவர்சாய் முரளி, தூதரக சிரேஷ்ட அதிகாரி நாகராஜன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாருக்கும் இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சிக்கு புதன் கிழமை விஜயம் செய்த யாழ். இந்தியத் துணைத் தூதரக அதிகாரி குழுவினர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான முருகேச சந்திரகுமார் அக் கட்சி யின் தலை வர் சு.மனோகரன் உள்ளிட்ட குழுவினரைச் சமத்துவக் கட்சி அலுவலகத் தில் சந்தித்துக் கலந்துரையா டியுள்ளனர்.

சமகால அரசியல் நிலைமைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இதன் போது கலந்துரையா டப்பட்டதாகச் சமத்துவக் கட்சி தெரிவித்துள் ளது.(05)

# மசாஜ் நிலையம் என்ற போர்வையில் இயங்கிய விபச்சார விடுதிகள் முற்றுகை

## 8 பேர் கைது

கிரிபத்கொடை பிரதேசத்தில் மசாஜ் நிலையம் என்ற போர்வையில் இயங்கி வந்த இரண்டு விபச்சார விடுதிகளிலிருந்து 08 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என கிரிபத்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

கிரிபத்கொடை பொலிஸாருக்குக்கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி, ஒரு விபச்சார விடுதியிலிருந்து 05 பெண்களும்மற்றையவிபச்சாரவிடுதியிலிருந்து 03 பெண்களும் செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை, பொலன்னறுவை, தெஹியத்தகண்டிய, பதவிய , மட்டக்குளி மற்றும் வெல்லம்பிட்டி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 24 முதல் 45 வயதுக்குட்பட்ட எட்டு பெண்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிரிபத்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

## கிழக்குப் பல்கலையில் தஞ்சமடைந்து

# காணாமலாக்கப்பட்ட 158 பேரின் 34 ஆவது ஆண்டு நினைவேந்தல்



கிழக்கு பல்கலைக்கழகத்தில் தஞ்சமடைந்த வேளை இராணுவத்தினால் விசாரணைக்கு என அழைத்துச்சென்று காணாமலாக்கப்பட்ட 158 பேரின் 34 ஆவது ஆண்டு நினைவேந்தல்நேற்று(வியாழக்கிழமை)அனுஷ்டிக்கப்பட்டதுடன் காணாமலாக்கப்பட்டோருக்கான நீதி கோரி போராட்டமும் இடம்பெற்றது.

1990ஆம் ஆண்டு செப்ரெம்பர் 5 ஆம் திகதி கிழக்கு பல்கலைக்கழக முகாமில் தஞ்சமடைந்தவர்களில் 158 பேர் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் காணாமல் ஆக்கப்பட்டாலும் உயிருடன்இருப்பார்கள்என்றநம்பிக்கையைஇழந்தநிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களின் பட்டியலில் இடம்பெறுகிறார்கள்.

வந்தாறுமூலை பல்கலைக்கழக வளாக முன்றிலில் கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீட மாணவர் ஒன்றியம் மற்றும் மட்டக்களப்பு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் இணைந்து ஏற்பாடு செய்த நினைவேந்தலில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள், மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க தலைவி அ.அமலநாயகி, கிழக்கு பல்கலைக்கழக கலை கலாசார பீட மாணவர் ஒன்றிய தலைவர் வி.கஜரூபன், சிவில் சமூக செயற்பாட்டாளர் ரஜனி ஜெயபிரகாஸ், அகம் மனிதாபிமான வள நிலையத்தின் திட்ட முகாமையாளர் நா.மிருஜா உட்பட பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

இதன்போதுபல்கலைக்கழகவளாகத்தின்முன்பதாதைகளை ஏந்தியவாறு தமது உறவுகளுக்கு நீதி கோரி கவனவீர்ப்பு பேராட்டத்தில் ஈடுபட்டதுடன் உறவுகள் மற்றும் மாணவர்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களை நினைவுகூர்ந்து மௌன இறைவணக்கம் செலுத்தியும் மெழுகுவர்த்தி ஏற்றியும் அஞ்சலி செலுத்தினர்.

1990.09.05 அன்று அகதி முகாமுக்குள் நுழைந்த இராணுவம் தங்களை அறிமுகப்படுத்தி, பின்னர் ஒலிபெருக்கி மூலம் குறிப்பிட்ட வயதுடையவர்களை கிழக்கு பல்கலைக்கழக மைதானத்தில் ஒன்றுகூடுமாறு அறிவித்தல் விடுத்துள்ளனர்.

மைதானத்தில் வரிசையில் நிறுத்தப்பட்டவர்கள் இராணுவத்தினரால்அழைத்துவரப்பட்டமுகமூடிமனிதர்கள்முன் நிறுத்தப்பட்டு, முகமூடி மனிதர்களால் தலையாட்டப்பட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு, பஸ் வண்டிகளில் அழைத்துச் செல்லப்பட்டதாக இந்த சம்பவத்தை வருடங்கள் 34 கடந்தும் தங்கள் அனுபவ ரீதியாக பலரும் நினைவுகூருகிறார்கள்.

இது தொடர்பாக மட்டக்களப்பு சமாதான குழுவானது பாதுகாப்பு அமைச்சு உட்பட பல்வேறு தரப்பினரிடமும் முறைப்பாடு செய்தது.

1990 செப்ரெம்பர் 5ஆம் திகதி 32 பேரை மட்டுமே விசாரணைக்காக கைது செய்து அழைத்துச் சென்றதாகவும் 24 மணிநேரத்துக்குள் அவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டுவிட்டார்கள் எனவும் அவ்வேளை பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக பதவி வகித்த எயர்மார்சல் பெர்னாண்டோ இதற்கான பதிலை அனுப்பியிருந்தார். இந்த பதிலை மட்டக்களப்பு சமாதானக் குழு நிராகரித்தது.

விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டு மூன்றாம் நாள் செப்டம்பர் 8ஆம் திகதி கிழக்கு பல்கலைக்கழக அகதி முகாமுக்கு சென்று சம்பவம் தொடர்பாக ஆராய்வதற்காக கிழக்கு மாகாண இராணுவ தளபதியாக இருந்த ஜெரி சில்வா உட்பட பாதுகாப்பு உயர்மட்டக் குழுவினரும் சென்றிருந்தனர்.

இராணுவத்தினரே எமது உறவுகளை அழைத்துச் சென்றதாக மக்களும் முகாம் பொறுப்பாளர்களும் இராணுவ உயர் அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டுவந்த வேளை கடும்தொனியில் இராணுவ அதிகாரிகள் பதிலளித்ததாக கூறப்படுகிறது.





வடக்கு - கிழக்கு மாகாணங்களில் காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணைக்காக ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி கு.பாலகிட்ணர் தலைமையில் ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. இந்த ஆணைக்குழு முன்னிலையில் பலர் சாட்சியமளித்தனர்.

ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி கு.பாலகிட்ணர் தலைமையில் ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் பொதுமக்கள் வழங்கிய சாட்சிகளின் அடிப்படையில் இராணுவத்தினரே செப்டெம்பர் 5ஆம் திகதி 158 பேரையும், 23ஆம் திகதி 16 பேரையும் கைது செய்து கொண்டுசென்றனர் என தெரிவித்திருந்தது.

எனினும் இதுவரையில் இவர்களுக்கான நீதியைப் பெற்றுக்கொடுக்க முடியாத நிலையில் 34வது வருடமாக உறவுகள் போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.09.2024இல் வெளியிடப்பெற்றது